# அரசு ஊழியர்

மே 2021

மலர் : 42 இதழ் : 5

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு
ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு
மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி



முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com



*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

### என் கட்சிக்காரர் ரொம்ப நல்லவரு!

"யுவர் ஹானர், என் கட்சிக்காரருக்கு ஜாமீன் வேணும்."

"யோவ் வக்கீலு அயதாளு 13 கொலை பண்ணியிருக்கான். அவனுக்கு போயி ஜாமீன் கேக்கறே?"

"என் கட்சிக்காரருக்கு ஆக்சிஜன் தயாரிக்கத் தெரியும் யுவர் ஹானர். ஆக்சிஜன் தயாரித்து மக்கள் உயிரை காப்பாற்ற தயாராக உள்ளார் யுவர் ஹானர்."

"ஓ...அப்ப சரி. 3 மாதம் ஜாமீன் தர்றேன். ஜாமீன் காலத்தில் ஆக்சிஜன் மட்டுமே தயாரிக்கணும். வேறு எயத கொலை, கொள்ளை சம்பவங்களிலும் அவர் ஈடுபடக்கூடாது."

"தேங்க்யூ யுவர் ஹானர், தேங்க்யூ."

(வாட்ஸ்ஆப் கதை)



தலைவர் மடல்

# மக்கள் தீர்மானித்த மாற்றமும், கொரோனா தடுப்பூசி ஏமாற்றமும்!

## மக்களால் தீர்மானிக்கப்பட்ட மாற்றம்!

**நா**மெல்லாம் எதிர்பார்த்தபடியே திராவிட முன்னேற்றக் கழகம் அறுதிப் பெரும்பான்மையுடன் தமிழகத்தில் ஆட்சி அமைப்பதற்கு மக்கள் அங்கீகாரம் அளித்துள்ளார்கள். தமிழக மக்கள் ஒவ்வொருவரும் இந்த வெற்றி திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு அரசியல் கட்சியின் வெற்றியாக கருதாமல் தமிழகத்தின் வெற்றியாகவே பார்க்கிறார்கள். கொரோனாவின் கடும் தாக்கத்திற்கு மத்தியிலும் தமிழக மக்களை இந்த தேர்தல் முடிவுகள் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. குறிப்பாக பாரதிய ஜனதா கட்சி என்ற தீய சக்தியின் அடிமை சேவகனாக இருந்து தமிழக மக்கள் நலன்களுக்கு எதிராக செயல்பட்டு வந்த அதிமுக ஆட்சி தூக்கி வீசப்பட்டிருப்பது தமிழக மக்களுக்கும் அரசு ஊழியர் ஆசிரியர் சமுதாயத்திற்கும் இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்துள்ளது. திமுகவும் அதன் தோழமைக் கட்சிகளும் தமிழக மக்களின் நலன்களுக்கு எதிரான பாரதிய ஜனதாவின் பொய்முகத்தை மக்களிடம் எல்லா நேரங்களிலும் தோலுரித்துக் காட்டி வந்துள்ளன. கூட்டணி கட்சிகளும் பாரதிய ஜனதாவின் திட்டங்களையும் அதை கண்மூடித்தனமாக ஆதரித்து வந்த அதிமுக அரசையும் தமிழகத்திற்குள் காலூன்ற விடக்கூடாது என்ற ஒற்றைக் காரணத்திற்காக குறைந்த இடங்களில் போட்டியிட்டாலும் ஒத்த கொள்கையுடன் எதிர்த்து கைகோர்த்து நின்றதால் அதிகாரம் வாய்ந்த ஒரு மத்திய ஆளும் கட்சி தன்னுடைய அழுத்தங்களை அடிமை அரசின் மூலம் செலுத்த முடியாமல் போனது. கடந்த பத்தாண்டு காலமாக கும்மிருட்டில் பூட்டி வைக்கப்பட்ட தமிழகத்திற்கு நம்பிக்கை ஒளி பாய்ச்சுவதாக இந்த தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளது. அதே சமயம் இது சமூக நீதி காக்கும் மண் என்பதை இன்னொரு முறை ஆதிக்கச் சக்திகளுக்கும் அதனிடம் மண்டியிட்ட அடிமை கட்சிக்கும் தெள்ளத் தெளிவாக புரிய வைத்துள்ளனர் தமிழக மக்கள்.

கடந்த பத்தாண்டுகளில் தமிழக மக்கள் பல சோதனைகளை கடந்து வந்துள்ளனர். அதிலும் ஜெயலலிதா அம்மையார் மறைவுக்குப் பின்னர் தமிழகத்தில் ஒரு அடிமை ஆட்சி எப்படி நடந்தது என்பதை மக்கள் கண்கூடாகப் பார்த்தார்கள். தமிழக மக்களைப் பற்றியோ அவர்களின் உணர்வுகள், உரிமைகள் பற்றியோ கொஞ்சம் கூட கவலைப் படாமல் மத்திய மோடி அரசாங்கம் பிறப்பித்த உத்தரவுகளும், அதை அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டு எடப்பாடி திரு.பழனிச்சாமியும் அவருடைய அமைச்சர்களும் மக்கள் எப்படி போனால் என்ன, தங்கள் நாற்காலிகளுக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்று கடிவாளம் பூட்டிய குதிரைகளாக மத்திய அரசு சொன்ன பாதையில் சென்றதையும் ஒவ்வொரு தமிழரும் அறிவர்.

இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூகநீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோடியாக இருந்த மாநிலம் தற்போது எல்லாவற்றிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் அரசுப்பள்ளிகள் மற்றும் அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் முயற்சிகள் நடைபெறுவதும் ஆகும்.

ஒரு நாடு கல்வி சுகாதாரம் பற்றி
யோசிக்காமல்
24மணி நேரமும் சாதி
மதத்தையே சிந்தித்தால் எப்படி
அழியும் என இந்தியா ஒரு
எடுத்துக்காட்டு



அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முன்வராமல் அரசு உழியர்களையும் அவர்தம் பணிகளையும் இழிவுபடுத்தும் வகையில் பேசியும், செய்திகள் வெளியிட்டும் வந்ததுதான் அதிமுக அரசின் சாதனையாக இருந்தது. எடப்பாடி திரு.பழனிச்சாமி அவர்களின் அரசாங்கம் அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காமல் தம்முடைய நாற்காலிகளை கெட்டியாகப் பிடித்துகொண்டு மத்திய அரசின் காலடியில் வீழ்ந்து கிடந்தது. விளம்பரத்திற்காக சில திட்டங்கள் அவையும் காகிதத்தில் எழுதப்பட்ட சர்க்கரையாக காட்டப்பட்டு வந்தது. சுமார் 20 முறைகளுக்கு மேலாக அரசு ஊழியர்கள் தங்களுடைய குறைகளைக் கேட்க முதல்வரிடம் நேரம் கேட்டும் ஒருமுறைகூட அவர் சந்தித்து பேச முன்வராதது அவர் அரசு ஊழியர்களை எந்த இடத்தில் வைத்திருந்தார் என்பதற்கு ஒரு உதாரணமாகும்.

ஆனால் திமுக கட்சி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்ததும் புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெறுவது சத்துணவு அங்கன்வாடி ஊழியர்களுக்கு மற்ற அரசு ஊழியர்களைப் போலவே காலமுறை ஊதியம், ஓய்வூதியம் நிர்ணயித்தல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து நிறைவேற்றித்தருவதாக உறுதி அளித்துள்ளது. அந்த வகையில் தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்வார்கள் என்ற முழு நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது. இந்த சமயத்தில் நம்மை புறந்தள்ளிய அதிமுக அரசை தூக்கியெறிய வேண்டும் என்று கங்கணம் கட்டி அதற்கான வேலைகளில் முனைப்பாக ஈடுபட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தொழிலாள வர்க்கத்தினர் உழைப்பாள பெருமக்கள் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்க வேண்டியது நமது கடமையாகும்.

## காசு...பணம்...துட்டு...தடுப்பூசி ஏமாற்றம்!

தமிழகத்தில் கொரோனா தொற்றின் 2வது அலை வேகமாக பரவி வருகிறது. தற்போது தினசரி கொரோனா பாதிப்பு 20,000ஐ இந்த கட்டுரை எழுதும் நாளில் தொட்டுள்ளது. தினசரி மரணம் 100ஐ நெருங்கிக் கொண்டிருக்கிறது. இது இந்த மே மாதம் மூன்றாம் வாரம் வரை தொற்று பாதித்தவர்கள் எண்ணிக்கை உயர்ந்து மாதக்கடைசியில்தான் குறைய ஆரம்பிக்கும் என மருத்துவ வல்லுநர்கள் கூறுகிறார்கள். கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் மருத்துவ மனைகளில் படுக்கைகள் நிரம்பி வழிய ஆரம்பித்துவிட்டன. மருத்துவமனைகளில் ஆக்சிஜன் தேவைப்படும் நோயாளிகள் அதிகரித்து வரும் நிலையில் ஆக்சிஜன் தட்டுப்பாடு மற்ற மாநிலங்களைப் போல தமிழகத்திலும் ஏற்படக்கூடும் என்ற ஐயமும் நிலவுகிறது. நோயாளிகள் அதிகரித்திருப்பதால் புதிய நோளாளிகளுக்கு மருத்துவமனைகளில் படுக்கைகள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டை விட தற்போது கொரோனா பரவல் வேகம் 10 மடங்கு அதிகமாக உள்ளதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மூச்சுத் திணறல், ஆக்சிஜன் அளவு குறைதல், தொடர்ச்சியான மார்பு வலி அல்லது அழுத்தம். பசியின்மை, வயிற்றோட்டம், உடல் சோர்வு, உணர்வு இல்லாமை ஆகியவை இதன் தீவிர அறிகுறிகளாக கூறப்பட்டாலும் இந்த அறிகுறிகள் இல்லாமலேயே கூட பலபேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டு வருகிறது.

இந்திய அளவில் தமிழகத்தின் நிலை மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் பரவாயில்லை என்ற அளவுக்கு உள்ளது. ஆனாலும் இது மே 3ஆம் தேதி நிலைதான். பாரதிய ஜனதா ஆளும் மாநிலங்கள் உள்ளிட்ட வட மாநிலங்கள் மற்றும் டெல்லி யூனியன் பிரதேசத்தில் கொரோனாவின் இரண்டாவது அலை மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனைகளில் இடமோ, ஆக்சிஜனோ இல்லாதா நிலை எழுந்துள்ளது. கொத்து கொத்தாக செத்து மடியும் மக்களை எரியூட்டுவதற்கு மயானங்களில் இடமில்லை. 24 மணி நேரமும் மயானங்களில் நெருப்பு ஜுவாலைகள் எரிந்து கொண்டே இருக்கின்றன. மின் எரியூட்டும் மயானங்களில் எரியூட்டுவதற்காக வரிசையில் பிணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் நிலை அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துவதாக உள்ளன. இந்நிலையில் மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திரமோடி ஆற்றியுள்ள உரை நிலைமையின் தீவிரத்தை அவர் உணர்ந்ததாகவோ அதற்கான தீர்வினை முன் வைப்பதாகவோ இல்லை. எப்போதும் போல் நாட்டு மக்கள் நம்பிக்கை இழக்க வேண்டாம் என்று உபதேசம் செய்யும் வேலையைத்தான் அவர் செய்துள்ளார்.

இரண்டாவது அலை வரப்போகிறது கவனமாக இருக்க வேண்டும் என்று மருத்துவ வல்லுநர்களும், சமூக ஆர்வலர்களும் இந்திய அரசை முன்கூட்டியே எச்சரித்தும் மத்திய அரசு அதை பெரிதாக பொருட்படுத்தவில்லை என்பது இப்போது நடந்துவரும் நிகழ்வுகளிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. இரண்டாவது அலை வருவதற்கு முன்பு இந்தியாவில் உள்ள 130 கோடி பேரில் 30 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போட்டுவிட வேண்டும் என்ற அறிவுறுத்தலையும் மத்திய அரசு சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை. மேலும் தடுப்பூசி குறித்து மக்களுக்கு எழுந்துள்ள சந்தேகங்கள் சமூக வலைத்தளங்களில் அவை பற்றி வரும் செய்திகள் போன்றவை தடுப்பூசி போட்டுக்கொள்ளலாமா வேண்டாமா என்ற திரிசங்கு சந்தேகத்தில் மக்களை நிறுத்திவிட்டது. அரசாங்கமோ, அமைச்சர்களோ, அரசு மருத்துவ நிபுணர்களோ இது குறித்து பொதுமக்களிடம் பிரச்சாரங்கள் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை. பல முக்கிய பிரமுகர்கள் ஊசி போட்டுக்கொண்டது தெரிய வந்தபின் மக்களில் சில தரப்பினர் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன் வந்தனர். மேலும் தடுப்பூசிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் காட்டிய முனைப்பை மத்தியில் ஆளும் மோடி அரசு இந்திய மக்களில் 30 சதவீதம் பேருக்கு உடனடியாக தடுப்பூசி செலுத்தி முடிக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டவில்லை. கொரோனா தடுப்பூசி போடுவது மெல்ல உயர்ந்து வந்த நிலையில் தடுப்பூசி போட்டுக்கொண்ட நடிகர் திரு. விவேக் மற்றும் இயக்குநர் கேமராமேன் திரு.கே.வி.ஆனந்த் போன்ற திரை நட்சத்திரங்களின் அகால மரணங்கள் தடுப்பூசிப் போட்டுக்கொள்ளும் மக்களிடம் பயத்தை ஏற்படுத்திவிட்டன. இது குறித்து அரசாங்கமோ

சுகாதாரத் துறையோ பொதுமக்களின் சந்தேகங்களை தீர்க்கும் வகையில் தொடர் பிரச்சாரங்கள் மேற்கொள்ளவில்லை. மேலும் தடுப்பூசிகள் போட்டுக்கொள்ள இளைஞர்கள் பலர் ஆர்வத்துடன் இருக்க 45 வயதுக்கு மேற்பேட்டோருக்கு மட்டும் இந்த தடுப்பூசிகள் போடப்படும் என்ற அறிவிப்பினால் தடுப்பூசி போடுவது தமிழகத்தில் மிக மந்த அளவிலேயே நடைபெற்றது.

மே 1ஆம் தேதி முதல் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் போடப்படும் என அறிவித்த மத்திய அரசு அதற்கான மருந்துகளை பல மாநிலங்களுக்கு மே 3ஆம் தேதி வரை அனுப்பவில்லை. இதனால் மே1 அன்று தொடங்கவிருந்த 18 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி திட்டம் தற்காலிகமாக தமிழகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி குறித்த வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் தகுதியான அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ள பிரதமர் மோடி தடுப்பூசிகளை இனிமேல் காசுகொடுத்துதான் போட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். முகக்கவசம் அணிவது, கைகளை கழுவுவது, தனிமனித இடைவெளி போன்ற அறிவுரைகளை வழங்கயுள்ள பிரதமர் மருத்துவமனைகளில் ஆக்சிஜன் தட்டுப்பாடு பற்றியோ, நோய்த்தொற்று உள்ளவர்களுக்கு படுக்கை வசதி குறித்தோ எதுவும் தெரிவிக்கவில்லை. பலமாத ஊரடங்கிற்குப் பிறகு இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முயல்கிற




நேரத்தில் இரண்டாவது அலை மக்களைப் புரட்டிப்போட ஆரம்பித்திருக்கிறது. அவர்களுக்கு பொருளாதாரரீதியாக நிவாரணம் அளிப்பது குறித்து, தவறியும் மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி எதுவும் பேசவில்லை. ஆனால் தடுப்பூசிகிளை காசு கொடுத்து வாங்கி போட்டுக்கொள்ள வேணடும் என்று மட்டும் அறிவிப்புகள் வாயிலாக தெரிவித்துள்ளார்.

மூன்றாம் நான்காம் அலைகளை எதிர்கொண்டாலும் கூட உலகின் பெரும்பாலான நாடுகள் பொதுமுடக்கத்தைத் தவிர்த்து பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி பரவலாக்கல் திட்டம் ஆகியவற்றை அமலாக்கிக் கொண்டிருக்க இந்திய அரசோ குழப்பமாக பொதுமுடக்க அறிவிப்புகள், தடுப்பூசி பற்றாக்குறை, மரணம் குறித்த அச்சம் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. அச்சமூட்டுகிற இத்தகைய நெருக்கடியான நிலைமைகளிலிருந்து எவ்வாறு மீளப்போகிறோம் எனும் ஒற்றைக் கேள்வியே தேசத்தின் அனைத்து முனைகளிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

மத்திய அரசு 18 வயது முதல் 44 வயதுள்ளவர்கள் என அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி இலவசமாக போடப்படும் என அறிவித்துவிட்டு தற்போது தடுப்பூசிக்கு தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தைச் சொல்லி 18 வயது முதல் 44 வயதுள்ளவர்கள் தடுப்பூசி போடுவதற்கு இணைய தளத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் அப்படி பதிவு செய்யப்பட்டவர்களுக்கு வரிசை அடிப்படையில் மே1 ஆம் தேதி முதல் தடுப்பூசி செலுத்தப்படும் எனவும், அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை அவர்கள் கண்டிப்பாக செலுத்த வேண்டும் என்றும் அறிவிப்பு செய்து மாநில அரசுகளுக்கு மத்திய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷன் கடிதம் எழுதியுள்ளார்.

சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா நிறுவனம் தனது கோவிஷீல்ட் தடுப்பூசிகளை மாநிலங்களுக்கு ரூ.400/-க்கும், தனியார் மருத்துவமனைகளுக்கு ரூ.600/-க்கும் விற்கப்போவதாக அறிவித்துள்ளது. பாரத் பயோடெக் நிறுவனமானது தனது கோவாக்சின் தடுப்பூசியை மாநிலங்களுக்கு ரூ.600/-க்கும் தனியார் மருத்துவமனைகளுக்கு ரூ.1200/-க்கும் விற்பதாகவும் கூறியுள்ளது. இரண்டு நிறுவனங்கமே தன்னிச்சையாக இந்த விலை அறிவிப்பைச் செய்துள்ளன. தற்போது இந்த




விலைகள் சிறிது குறைக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் பணம் கொடுத்து தடுப்பூசி போட்டுக்கொள்ளும் பொருளாதார நிலையில் இந்திய நாட்டின் ஏழை எளிய மக்கள் இல்லை என்கிற யதார்த்தத்தை உணர்ந்து மத்திய மாநில அரசுகள் தடுப்பூசிகளை இலவசமாக செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால் இந்த விலை உயர்வை மத்திய அரசு தடுக்காமல் விட்டுள்ள நடவடிக்கையானது 18 வயது முதல் 44 வயதிற்குட்பட்ட நாட்டின் 79 சதவீத மக்களை தடுப்பூசி போட்டுக்கொள்வதிலிருந்து விலக்கி வைக்கும் நியாயமற்ற செயல்பாடு என்பதுடன், அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 14ன் கீழ் பாரபட்சமானதும் ஆகும். தடுப்பூசிக்கு வெவ்வேறு விலை நிர்ணயத்தை அனுமதித்ததன் மூலம் கொரோனா தடுப்பூசியை மத்திய அரசே தனது பொறுப்பில் மொத்தமாக கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு விநியோகிக்கும் முந்தைய நிலையிலிருந்தும் கடமையிலிருந்தும் விலகியுள்ளது. இந்தியா சுதந்திரமடைந்த பிறகு இதுவரை எந்த தடுப்பூசிகளையும் இந்திய மக்கள் விலை கொடுத்து வாங்கி போட்டுக்கொண்டதில்லை. இதன்மூலம் மந்தை நோய் எதிர்ப்பு சக்தி உருவாகாமல் போய்விடும். ஏழை எளிய மக்கள் தங்களின் அன்றாட உணவிற்கே இந்த கொரோனா காலத்தில் அல்லல்படும் நிலையில் அவர்களால் இந்த விலைகளை கொடுத்து தடுப்பூசி போட்டுக்கொள்வது இயலாத காரியமாகும். உலகிலேயே கொரோனா தடுப்பூசி விலை நிர்ணயத்தை உற்பத்தியாளர்களிடமே ஒப்படைத்த ஒரே நாடு இந்தியாதான். உலகளாவிய நோய் தடுப்புச் செயல்முறை மட்டுமே பேரழிவைத் தணிப்பதற்கான ஒரே தீர்வாக இருப்பதால் கொரோனா தடுப்பூசிகளை அதன் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி இந்திய மக்கள் அனைவருக்கும் இலவசமாக செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமையாகும். மத்திய அரசு அதைச் செய்யாமல் வேடிக்கை பார்ப்பது சந்தை நிர்ப்பந்தங்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் இலாப நோக்கங்களைத் தாண்டி பரந்த அளவில் நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களின் சுகாதார நலன்களையும் மீறும் வகையில் உள்ளது. இது தடுக்கப்படாவிட்டால் இந்திய நாடு அதற்கு மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டியதிருக்கும். ஆகவே மத்திய மாநில அரசுகள் தடுப்பூசிகளை விரைவாக நாட்டுமக்கள் போட்டுக்கொள்ள வழி வகை செய்வதுடன் அதை இலவசமாக செலுத்திக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ■

| | மோடி ஆட்சிக்கு வரும் போது | தற்போது |
|---|---|---|
| 5 ஆண்டு சேமிப்பு வட்டி விகிதம் | 8.5% | 5.8% |
| PF வட்டி விகிதம் | 8.7% | 6.4% |
| பெட்ரோல் வரி | ரூ. 9.48 | ரூ. 32.98 |
| டீசல் வரி | ரூ. 3.56 | ரூ. 31.83 |
| கார்ப்பரேட் வரி | 30% | 22% |

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com



மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**


## அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கு

**வாழ்த்துக்கள்...**

**தி**ராவிட முன்னேற்றக் கழகம் அறுதிப் பெரும்பான்மையுடன் தமிழகத்தில் ஆட்சி அமைக்க இருப்பதற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த வெற்றி ஏற்கனவே எழுதப்பட்ட ஒன்று என்பது தெரிந்ததுதான் என்றாலும் சட்டப்படியான அறிவித்தலுக்காக தேர்தலுக்குப் பிறகு பல நாட்கள் கட்டுப்பாட்டுடன் கூடிய பொறுமையுடன் தமிழக மக்களை தேர்தல் ஆணையம் காத்திருக்க வைத்து விட்டது. தமிழக மக்கள் ஒவ்வொருவரும் இந்த வெற்றி திராவிட முன்னேற்ற கழகம் என்ற ஒரு அரசியல் கட்சியின் வெற்றியாக நாங்கள் கருதவில்லை. மாறாக தமிழகத்தின் வெற்றியாகவே தமிழக மக்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

கொரானாவின் கடும் தாக்கத்திற்கு மத்தியிலும் தமிழக மக்களை இந்த தேர்தல் முடிவுகள் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. குறிப்பாக பாரதிய ஜனதா கட்சி என்ற தீய சக்தி தமிழகத்தில் காலூன்ற முடியாமல் தடுக்கப்பட்டிருப்பது தமிழகத்திற்கு இரட்டிப்பு மகிழ்ச்சி அளித்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளைப் போலவே இந்த தேர்தலிலும் மக்கள், பாரதிய ஜனதா என்ற மதவெறி கட்சியை புறக்கணித்திருக்கிறார்கள். அதற்கு காரணம் திராவிட முன்னேற்ற கழகத்தின் பெருமுயற்சிதான் என்றால் அது மிகையில்லை.

திமுகவும் அதன் தோழமைக் கட்சிகளும் தான் பாரதிய ஜனதாவின் பொய் முகத்தை மக்களிடம் எல்லா நேரங்களிலும் தோலுரித்துக் காட்டி வந்துள்ளன. கூட்டணி கட்சிகளும் பாரதிய ஜனதா என்ற மதவாத தீயசக்தி தமிழகத்தில் நுழைந்து விடக்கூடாது என்ற ஒற்றைக் காரணத்திற்காக தங்கள் கட்சியுடன் கைகோர்த்து நின்றதால் அதிகாரம் வாய்ந்த ஒரு மத்திய ஆளும் கட்சி தன்னுடைய அழுத்தங்களை அடிமை அரசின் மூலம் செலுத்த முடியாமல் போனது. கடந்த பத்தாண்டு காலமாக கும்மிருட்டில் பூட்டி வைக்கப்பட்ட தமிழகத்திற்கு நம்பிக்கை ஒளி பாய்ச்சுவதாக இந்த தேர்தல்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com


முடிவுகள் அமைந்துள்ளது. அதே சமயம் இது திராவிட மண் என்பதை இன்னொரு முறை ஆதிக்க சக்திகளுக்கும் அதனிடம் மண்டியிட்ட அடிமை கட்சிக்கும் தெள்ளத் தெளிவாக புரிய வைத்துள்ளனர் தமிழக மக்கள்.

கடந்த பத்தாண்டுகளில் தமிழக மக்கள் பல சோதனைகளை கடந்து வந்துள்ளனர். அதிலும் ஜெயலலிதா அம்மையார் மறைவுக்குப் பின்னர் தமிழகத்தில் ஒரு அடிமை ஆட்சி எப்படி நடந்தது என்பதை மக்கள் கண்கூடாகப் பார்த்தார்கள். தமிழக மக்களைப் பற்றியோ அவர்களின் உணர்வுகள், உரிமைகள் பற்றியோ கொஞ்சம் கூட கவலைப்படாமல் மத்திய மோடி அரசாங்கம் பிறப்பித்த உத்தரவுகளும் அதை அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டு எடப்பாடி திரு.பழனிச்சாமியும் அவருடைய அமைச்சர்களும் மக்கள் எப்படி போனால் என்ன, தங்கள் நாற்காலிகளுக்கு ஆபத்து வந்து விடக்கூடாது என்று கடிவாளம் பூட்டிய குதிரைகளாக மத்திய அரசு சொன்ன பாதையில் சென்றதையும் ஒவ்வொரு தமிழரும் அறிவர். மத்திய அரசின் மக்கள் விரோத சட்டங்களை, கொள்கைகளை திராணியுடன் எதிர்த்து கேட்ட ஒரு இயக்கமாக, சக்தியாக திராவிட முன்னேற்ற கழகம் இருந்தது. இந்த மகா சக்தி இல்லாவிட்டால் தமிழகத்தில் தமிழருக்குரிய அடையாளம் கூட அழிக்கப்பட்டிருக்கக் கூடும்.

இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூக நீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோடியாக இருந்த மாநிலம் தற்போது எல்லாவற்றிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி, வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படும் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசுத் துறைகளை தனியார்மயமாக்கும் முயற்சிகள் நடைபெறுவதும் ஆகும்.

அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முன்வராமல் அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அவர்தம் பணிகளையும் இழிவுபடுத்தும் வகையில் பேசியும், செய்திகள் வெளியிட்டும் வந்ததுதான் அதிமுக அரசின் சாதனையாக இருந்தது. எடப்பாடி திரு.பழனிச்சாமி அவர்களின் அரசு, அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாகக்கூட மதிக்காமல் தம்முடைய நாற்காலிகளை கெட்டியாக பிடித்துக் கொண்டு மத்திய அரசின் காலடியில் வீழ்ந்து கிடந்தது. விளம்பரத்திற்காக சில திட்டங்கள் அவையும் காகிதத்தில் எழுதப்பட்ட சர்க்கரையாக காட்டப்பட்டு வந்தது. சுமார் 20 முறைகளுக்கு மேலாக அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுடைய குறைகளை கேட்க முதல்வராக இருந்த எடப்பாடி திரு.பழனிசாமியிடம் நேரம் கேட்டும் ஒருமுறைகூட அவர் எங்களை சந்தித்து பேச முன்வராதது அவர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை எந்த இடத்தில் வைத்திருந்தார் என்பதற்கு ஒரு உதாரணமாகும்.

ஆனால் தங்களுடைய கட்சியும், தாங்களும் எங்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி அமைந்ததும் புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெறுவது உள்ளிட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் குறைகளை பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என அறிவித்து எங்களுக்கு நம்பிக்கை அளித்துள்ளீர்கள். திராவிட முன்னேற்ற கழக ஆட்சி கலைஞர் திரு மு.கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்த சமயங்களில் எல்லாம் அரசு ஊழியர்களுக்கு சொன்னதை மட்டுமல்ல சொல்லாததையும் செய்திருக்கிறது. அந்த வகையில் தாங்களும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து ஆவண செய்வீர்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

இந்த மகிழ்ச்சியான தருணத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியில் அரசு ஊழியர்களாக நாங்களும் எங்களின் ஒரு சிறு பங்களிப்பையேனும் செலுத்தியிருக்கிறோம் என்ற பெருமிதம் கொள்கிறோம். இந்த வெற்றியில் எங்கள் பங்களிப்பு சிறிதாக இருந்தாலும் அது மதிப்புகரமானதாக இருந்திருக்கிறது என்ற மனநிறைவு உள்ளது. தாங்கள் பதவியேற்று தமிழகத்தை சிறப்பான பாதையில் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக கொண்டு செல்வீர்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. அதற்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களாகிய நாங்கள் அனைவரும் இந்த அரசாங்கத்திற்கு பக்கபலமாக இருந்து தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு எங்கள் முழு ஒத்துழைப்பை நல்குவோம் என்பதை இந்த மகிழ்ச்சி திருநாளில் தங்களுக்கு எங்கள் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் வாழ, தமிழகம் வளர, தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ

தங்கள் நல்லாட்சி என்றென்றும் தொடரட்டும்.

வாழ்த்துக்களுடன்,

**மு.அன்பரசு**
மாநிலத் தலைவர்

**ஆ.செல்வம்**
பொதுச் செயலாளர்

## மாவட்ட ஆட்சியர் மூலம் அளிக்கப்பட்ட முறையீடு



திருப்பூர்



தருமபுரி



திருவள்ளூர்



திருச்சி

# மூச்சுத்திணறும் இந்தியா

## (பொறுப்பற்ற அரசும் பொது சுகாதார பேரழிவும்)

இந்தியாவில் கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாவது அலை மிக மோசமான முறையில் பரவி ஆயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்துக்கொண்டிருக்கிறது. பெருந்தொற்றின் அபாயம் குறித்து மத்திய அரசு முன்கூட்டியே திட்டமிடாததால் நமது நாடு தேசியப் பொது சுகாதார பேரழிவுக்கு வித்திட்டுள்ளது. மருத்துவ மனைகளில் போதிய ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் கொரானா தொற்றின் காரணமாக மூச்சுத் திணறல் ஏற்பட்டு பலர் உயிரிழகின்றனர். ஆக்ஸிஜன் பற்றாக் குறையால் பெரும்பாலான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க இயலாமல் கைவிடப்படுகிறது. இந்தியாவில் ஆக்ஸிஜன் தயாரிப்பு நிறுவனங்கள் போதிய அளவு இல்லை. தலைநகர் டெல்லியில் உள்ள மருத்துவ மனைகளுக்கு மட்டுமே ஒரு நாளைக்கு 700 மெட்ரிக்டன் ஆக்ஸிஜன் தேவைப்படும் நிலையில் மத்திய அரசு மத்திய தொகுப்பிலிருந்து 378 மெட்ரிக்டன் அளவே மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கிறது. உத்தர பிரதேசத்தில் ஒரு சில மருத்துவ மனைகளில் "ஆக்ஸிஜன் இருப்பு இல்லை" என்ற அறிவிப்புகள் போடப்பட்டுள்ளன. ஆக்ஸிஜன் தொழிற்சாலை களின் வாசல்களில் நோயாளிகளின் உறவினர்கள் பலர் சிலிண்டர்களுடன் நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள். இந்த விவகாரத்தில் தலையிட்ட உச்சநீதிமன்றம் ஆக்ஸிஜன் தட்டுப்பாடு குறித்து என்ன கொள்கை வகுக்கப்பட்டுள்ளது என்று மோடி அரசை கடுமையாக சாடியுள்ளது. கோவிட்-19 இரண்டாவது அலையை கட்டுப்படுத்துவதில் மத்தியில் ஆளும் மோடி அரசு படுதோல்வி அடைந்திருப்பது பட்டவர்த்தனமாக தெரிகிறது.

கோரானா நோய்த்தொற்று அதிவேகமாக பரவுவதால் ஆயிரக்கணக்கான மக்ள்யிரிழந்துக் கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் எல்லோரும் கட்டாயம் தடுப்பூசி இரண்டு முறை போடவேண்டிய சூழலில் தமிழ்நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் 6,26,74,446 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இரண்டு தடவை தடுப்பூசி போடவேண்டுமானால் 12,53,48,892 எண்ணிக்கை தமிழ்நாட்டிற்கு மட்டுமே தேவைப்படும் சூழலில் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் 182 கோடிக்கும் மேல் தடுப்பூசிகள் தேவைப்படும். அந்த அளவிற்கு இந்தியாவில் தடுப்பூசி உற்பத்தி செய்யப்பட வில்லை. இந்நிலையில் பூனேயில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் கோவிஷீல்டு தடுப்பூசி மருந்தையும் ஐதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் கோவேக்சின் மருந்தையும் சப்ளை செய்து வருகிறது. சீரம் இன்ஸ்டிடியூட் கோவிஷீல்டு தடுப்பூசி மருந்தை ஒரு டோஸ் மாநில அரசுக்கு ரூ.400 என்றும் தனியார் மருத்துவ மனைகளுக்கு ரூ.600 என்றும் மே 1 முதல் விற்கபோவதாக அறிவித்துள்ளது. மேலும் மத்திய அரசுக்கு ரூ.150க்கு 10 கோடி டொஸ்கள் விற்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 11 கோடி டோஸ்களும் ரூ.150க்கு விற்கப்படவுள்ள நிலையில் இனி மத்திய அரசுக்கு ஒரு டோஸ் ரூ.400 விற்கவுள்ளதாக அறிவித்துள்ளது. கோவிட்-19 பொதுமுடக்கதால் பொருளாதார ரீதியாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள அன்றாடங் காய்சிகள், ஏழை எளிய மக்களின் உயிர் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. நமது அண்டை மாநிலமான கேரளாவில் நூற்றுக்கு நூறு தடுப்பூசிகள் எவ்வித சேதாரமும் இன்றி மக்களுக்கு போடப்பட்டுவருகிறது. கோவிட் சிகிச்சை 95 சதவீதம் அரசாங்க மருத்துவ மனைகளில் வழங்கப்படுகிறது. தனியார் மருத்துவ மனைகளில் ஆகும் சிகிச்சை செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. எவரும் பட்டினி கிடக்க கூடாது என்பதற்காக 88 லட்சம் மக்களுக்கு இலவசமாக உணவுப் பைகள் வழங்கப்பட்டு வருகிறது. பொது சுகாதார அமைப்பு முறைக்கு முன்னுரிமை கொடுத்து வளர்ச்சிக்கு திட்டமிட்டதன் மூலமே கேரள அரசு இதை சாத்தியமாக்கியுள்ளது.

கொரோனா நோய்த் தொற்றின் முதல் அலையிலேயே நீண்ட பொது முடக்கம் காரணமாக மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு அன்றாடங்காய்ச்சிகள் கூலித் தொழிலாளர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள், நாட்டுப்புற கலைஞர்கள், நடைபாதை சிறு வணிக வியாபாரிகள், தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கும் சூழலில்

கோவிட்-19 இரண்டாவது அலையில்க் நாட்டில் நிலவும் மிகவும் மோசமான தீநுண்கிருமி தொற்றினால் ஏற்பட்டுள்ள சுகாதார பேரழிவினால் ஒருபக்கம் தொற்று நோயின் இறப்பும் மறுபக்கம் பசிபட்டினி இறப்பும் என ஏழை எளிய மக்கள் படும் துயரம் சொல்லி மாளாது. "தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனான் பவர்க்கு"" என்ற வள்ளூர் வாக்கிற்கேற்ப மக்களை காக்கும் நாடாளும் மன்னனுக்கு விரைவாக செயலைச் செய்தலும், அதனை அறியும் அறிவும், அதனை செய்யக்கூடிய துணிவும் நீங்காமல் இருத்தல் வேண்டும். ஆனால் ஆக்ஸிஜன் தட்டுப்பாடு வரும் முன்பே பெரிய அளவில் தேர்தல் பேரணிகளுக்கு அனுமதியளித்தது, கும்பமேளா கொண்டாடுவதற்காக கூடிய கூட்டம் என அனைத்திலும் மக்கள் கூட்டம் கூட்டமாக சென்று கோவிட் -19 தொற்று அதிவேகமாக பரவி இரண்டாவது அலை முதல் அலையை விட கட்டுக்கடங்காமல் எல்லை மீறி சென்றதற்கும், அதிக மரணங்கள் ஏற்படுவதற்கும், முன் எச்சரிக்கையாக, விதிமுறைகளை பின்பற்றவும், போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தியும் குடிமக்களை காப்பாற்ற தவறவிட்ட பிரதமர் மோடியின் அரசே இந்திய நாட்டின் பொது சுகாதார பேரழிவுக்கு முழு பொறுப்பு.

நாட்டில் நிலவும் மிகவும் மோசமான தீநுண்கிருமி தொற்றினால் ஏற்பட்டுள்ள சுகாதார பேரழிவினால் இந்திய நாட்டின் சுகாதார அமைப்பு பலமான ஆட்டம் கண்டுள்ளது. முதல் அலையில் தொற்று ஒரு நாளைக்கு 90,000 என்று உச்சத்தில் இருந்த நிலையில் இரண்டாவது அலையில் ஒருநாள் உச்சம் என்பது 3 லட்சம் என்ற எண்ணிக்கையை கடந்துவிட்டது. இனிமேலாவது பொது சுகாதாரத்தின் மீது அரசு முழுகவனம் செலுத்தி நோய்த்தொற்றினால் முச்சுத்திணறலில் இறந்து கொண்டிருப்பவர்களை காப்பாற்றிட தங்குதடையின்றி ஆக்ஸிஜன் கிடைக்கவும், உடனடியாக இந்தியா முழுமைக்கும் தடுப்பூசி இலவசமாக கிடைப்பதற்கும் அதற்கு போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்யவும், வேலையிழந்து பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுள்ள ஏழை எளிய மக்களுக்கு உரிய நிவாரணம் அளிக்கும் வகையில் மதம் ரூ.7500/- அளித்து மக்களை காத்திட முன்வரவேண்டும்.

- **தெ. வாசுகி**

## பாடல் -
## கண்டா வரச்சொல்லுங்க.

கண்டா. விரட்டியடிங்க..
கொரனாவ. கை கழிவி
வெளிய வெரட்டுங்க.
கண்டா வெரட்டியடிங்க...
கை கழிவி வெளிய வெரட்டுங்க....

முக கவசம் போட்டுகிங்க..கையல
சானிடைசர் வச்சிகிங்க...மக்க
உசிர புடிக்கவந்தவங்க.
அவுகள. இந்தி..யாவவிட்டு
போக சொல்லுங்க...
கண்டா விரட்டியடிங்க
கொரனாவ. கைகழுவி வெளிய
வெரட்டுங்க......

கொத்து கொத்தா செத்தவங்க.
கொளுந்து விட்டு
எரியுராங்க..
பிரான வாயுவை
கொடுத்திடாம
பிராணத்தையே
எடுத்திட்டாங்க...
மக்கள பித்து புடிக்க
வச்சிட்டாங்க...அவுள
கண்டா விரட்டியடிங்க
கொரணாவை கைகழுவி
வெளிய வெரட்டுங்க....

முதலாலளிக்கு முதல்
கொடுக்க.மக்களையும் பலிவாங்கிய...
மதிகெட்ட ஆட்சியாளர்களை
மறக்கவே முடியாதுங்க.
அவுகள மன்னிக்கவும் கூடாதுங்க...
கண்டா வெரட்டிடுங்க


- **தமிழ்ச்சுடர்**

# மே தின ஒளியில்

# வெல்வோம் நம் வழியில்

ஒரு தொழிலாளியை இன்னொரு தொழிலாளிக்கு எதிராக நிறுத்தும் சாதியும், மதமும் நீடிக்கும் வழிகளை ஒழிக்க வேண்டும். ஒரு தொழிலாளி மற்ற தொழிலாளர்களுக்கு மறுக்கும் உரிமைகளைப் பெற முடியாது என்பதை அவருக்கு உணர்த்த வேண்டும்.

- **புரட்சியாளர் அம்பேத்கர்**



கலைந்த தலை...
காக்கிச்சட்டையில் கிரீஸ்...
கையில் ஒரு ஸ்பேனர்...
முதலாளிக்கு எதிராக நாலு வசனம்...
பிறவி முதலாளி மகளையே காதலித்து...
பேக்டரிக்கு ஓனராகி...
அப்படியே ஒரு யூ டர்ன் போட்டு...
ஸ்ட்ரைக் பண்ணா நாடு நாசமாகிவிடும்...
எல்லாரும் உழைக்கணும்...

என்று உபதேசம் செய்து கல்லா கட்டும் கதாநாயகி பார்க்க தவமிருந்து...

இந்திய தொலைக்காட்சியில் முதன்முறையாக வெளிவரும் ஏதோ ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தயாரித்த பார்முலா படத்தை தொழிலாளர் தினத்தில் கோடிக்கணக்கில் வியாபாரம் விளம்பாரமாகும் விளம்பரங்களுக்கு இடையில் சுமார் 5 மணி நேரம் பார்த்து அயர்ந்து போய் விடுகிற ஒரு நாள் விடுமுறையாக மாறிப் போய் விடுமா...? மே 1.

தியாகத்தின் தழும்புகள்

ஆல்பர்ட் பார்சன்ஸ்

ஆகஸ்ட் ஸ்பைஸ்

சாமுவேல் பீல்டன்

ஆஸ்கர் நீஃப்

மைக்கேல் ஸ்க்வாப்

ஜார்ஜ் ஏங்கல்

அடொல்ஃபிப் பிஸ்சர்

லூயிஸ் லிங்

இவை வெறும் பெயர்கள் அல்ல உழைப்பாளி மக்களின் சுவாசக் காற்றில் கலந்திருக்கும் ஆக்சிசன். உலக அளவிலான உழைப்பாளி மக்களின் வாழ்க்கைக்கு வடிவத்தையும், வாழ்வதற்கு அர்த்தத்தையும் பெற்றுத் தந்த தொழிற்சங்க தவப்புதல்வர்கள். சிகாகோவில் சிந்திய ரத்தத்தின் வாடையும், தூக்குக் கயிற்றை முத்தமிட்ட சுவாசக் காற்றின் மிச்சத்தையும் தொழிலாளி வர்க்கம் சுவீகரித்துக் கொண்டுதான் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

## தாழ்வுற்ற நிலை

நீராவி இயந்திரமும் மின்சாரமும் ஆலை பயன்பாட்டிற்கு வந்த பிறகு அதிக உற்பத்தி - அபரிமிதமான லாபம் என்ற ஒற்றைக் குறிக்கோள் கொண்ட முதலாளிகள் தொழிலாளர்களை ஒட்டச் சுரண்டிய உச்சகட்ட காலமான 18ஆம் நூற்றாண்டின் இறுதி 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் குழந்தைகள், பெண்கள் என்ற வேறுபாடின்றி பணியில் 12லிருந்து 18 மணி நேரம் கட்டாயம் ஒழிப்பை செலுத்த வேண்டிய நிலை. ஓய்வுக்கும் உறக்கத்திற்கும் வழி இல்லை. அமெரிக்காவில் 1880 வாக்கில் தொழிலாளர்களின் சராசரி ஆயுட்காலம் வெறும் 30 வருடம் மட்டுமே என்பதிலிருந்து அவர்களின் வாழ்க்கை தரத்தை புரிந்துகொள்ளமுடியும். உலகின் பல நாடுகளிலும் நிலைமை இதுவே.

## தலைநிமிர்ந்த போராட்டங்கள்

பிரான்ஸ் நாட்டின் நெசவுத் தொழிலாளர்கள் 1834இல் 15 மணி நேர உழைப்பு நேரத்தை குறைக்க வலியுறுத்தி "ஜனநாயகம் அல்லது மரணம்" என்று முழக்கமிட்டு போராடினர்.

கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளான இங்கிலாந்து தொழிலாளர்கள் 1836இல் உலகின் முதல் சாசன இயக்கத்தை (Chartists) துவக்கி,

வேலை நேர குறைப்பு

அனைவருக்கும் ஓட்டுரிமை

நாடாளுமன்றத்தில் ஏழை பணக்காரன் பாகுபாடு களைதல்

உள்ளிட்ட ஆறு அம்ச கோரிக்கையை வலியுறுத்தி லட்சக்கணக்கான தொழிலாளர்களிடம் கையெழுத்து பெற்று நாடாளுமன்றத்தில் மனு அளித்து போராட்டத்தை துவக்கினர்.

ஆஸ்திரேலியாவில் 1856 ஏப்ரல் 21இல் கட்டிட தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை நிறுத்தம் செய்தனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும், ரயில்வே தொழிலாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரஷ்யாவில் வேலை நேர குறைப்பு, கூலி உயர்வு கேட்டு 1895, 1899 வரை பல நூற்றுக்கணக்கான வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன.

நமது நாட்டிலும் 1862 பம்பாய் ரயில்வே போராட்டம் தொடங்கி 1882 முதல் 1890 வரை 25க்கும் மேற்பட்ட வேலைநிறுத்தங்கள் நடைபெற்றதாக வரலாற்றுப் பதிவுகள் நினைவுகூறுகின்றன.

தமிழகத்தை பொருத்தவரை செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரம் தலைமையில் 1908ஆம் ஆண்டு தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்களின் வார விடுமுறை, வேலை நேர குறைப்பு, ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்தை குறிப்பிடலாம்.

## நினைவில் நிறைந்த மே நாள்

“சட்டபூர்வமான வேலை நேரம் என்பது அடிப்படையானது. இதில் முன்னேற்றம் இல்லாமல் வேறு சமூக முன்னேற்றம் காண்பது அரிது”

என்று 1865 ஜெனிவாவில் நடைபெற்ற முதலாம் அகிலத்தின் மாநாட்டு பிரதிநிதிகளிடையே மாமேதை கார்ல் மார்க்ஸின் எழுச்சி உரையாடல் உலக தொழிலாளி வர்க்கம் அடுத்த நிலைக்கு உந்தப்பட்டது.

1886 மே 1 அன்று நியூயார்க், சிகாகோ, பிலடெல்பியா, சின்சினாட்டி, பால்டிமோர் போன்ற அமெரிக்காவின் மிக முக்கிய தொழில் நகரங்களில் 8 மணி நேரம் வேலை, 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேர உறக்கம் என்ற கோரிக்கையை முன் வைத்து 3 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

சிகாகோ நகரில் 1886 மே 3 இல் “மெக்கார் மிக் ஹார்வெஸ்ட்டிங்” என்ற நிறுவனத்தில் கோரிக்கையை முன்வைத்து 3 ஆயிரம் தொழிலாளர்கள் திரண்டு அமைதியான வழியில் போராடிய போது காரணமின்றி காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 4 தொழிலாளர்கள் இறந்துபோனார்கள். நடந்த சம்பவத்தை கண்டித்து ஹே மார்க்கெட்டில் மே 4ஆம் தேதியன்று ஆல்பர்ட் பார்சன்ஸ் தலைமையில் அமைதி வழியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அங்கு பணியில் இருந்த போன் பீல்டு என்ற காவல்துறை அதிகாரி தலைமையில் 180க்கும் மேற்பட்ட காவல்துறையினர் திரண்டு சுற்றிவளைத்தனர். கலவர சூழலில் எங்கிருந்தோ வீசப்பட்ட கையெறி குண்டு வெடித்து காவலர் ஒருவர் இறந்து போனார். சொற்ப எண்ணிக்கையில் இருந்த தொழிலாளர்கள் மீது காவல்துறை கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியது. தொழிலாளர்கள் சிந்திய ரத்தத்தால் சிகாகோவின் மண் சிவந்து போனது.

தலைவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்குப் பின் ஆஸ்கர் நீஃப் தவிர ஏழு பேருக்கு மரண தண்டனை என்று ஈவிரக்கமின்றி தீர்ப்பளித்தது நீதிமன்றம்.

## மௌனத்தின் பேரொளியாய்

“நேரம் வரும்
அப்போது
எங்களது மௌனம்
மிக சக்தி வாய்ந்ததாக இருக்கும்.
இன்று நீங்கள்
எங்கள் குரலை
நெறிப்பதைவிட”

என்று 1887 நவம்பர் 11 அன்று ஆகஸ்ட் ஸ்பைஸ் தூக்கிலிடப்படுவதற்கு முன் புரட்சி முழக்கமிட்டார். அவருடன் ஆல்பர்ட் பார்சன்ஸ், அடொல்ஃப் பிஸ்சர், ஜார்ஜ் ஏங்கல் ஆகிய மூவரும் தூக்கிலிடப்பட்டனர். தொழிலாளி வர்க்கத்தின் தலைமகன்களின் இறுதி ஊர்வலத்தில் 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கண்டுகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதுபோன்ற தியாகங்களும், போராட்டங்களும், உலக உழைப்பாளி மக்களுக்கு

என்றென்றும் வழி காட்டவேண்டும் என்ற வகையில் 1889 ஜூலை 14 அன்று பாரீசில் கம்யூனிஸ்ட் இயக்கத்தால் "சர்வதேச தொழிலாளர் நாடாளுமன்றம்" என்ற கூட்டம் கூட்டப்பட்டது. அதில் பங்கேற்ற தொழிலாளி வர்க்கத்தின் ஒப்பற்ற மேதை பிரடெரிக் ஏங்கல்ஸ் மே 1 அன்று உலகத் தொழிலாளர்கள் போராட்ட நினைவை அனுசரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 18 நாடுகளிலிருந்து கலந்து கொண்ட 400 பிரதிநிதிகள் சார்பாக 1890 முதல் மே 1 அன்று உலக அளவில் தொழிலாளர் இயக்கம் நடத்த வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

## முதன்முறையாக செங்கொடி

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் தான் மேதினம் நிகழ்வுற்றது. தோழர் சிங்காரவேலர் தலைமையில் 1923ஆம் ஆண்டு சென்னை கடற்கரையில் மே 1 தொழிலாளி வர்க்கத்தின் அடையாளமான ரத்தத்தால் சிவந்த செங்கொடி பறக்கவிடப்பட்டது.

## முளைவிடும் சுரண்டல்கள்

வியர்வையும், ரத்தமும் சிந்தி, உயிர்த் தியாகம் செய்தும் போராடிப் பெற்ற உரிமைகள் நவீன தாராளமயம் என்ற பெயரில் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகிற சூழல் உருவாகி வருகிறது. கார்ப்பரேட் நலனில் அக்கறை கொண்ட மத்திய, மாநில அரசுகள் எளிய மக்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்க மறுக்கிறது.

பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை உழைப்பாளிகளின் தோளில் சுமத்தி மத்திய அரசின் ஆதரவுடன் வேலைநேரத்தை 12 மணியாக உயர்த்தி இந்திய ஒன்றியத்தின் பல மாநில அரசுகள் சட்டமியற்றியுள்ளன. இது வரலாற்றை பின்னுக்கிழுக்கும் அப்பட்டமான பிற்போக்குத்தனமாகும்.

மேலும் மத்திய அரசின்

புதிய கல்விக் கொள்கை

தொழிலாளர் சட்டத் திருத்தம்

பொதுத் துறைகள் விற்பனை

சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு

புதிய வேளாண் திருத்தச் சட்டங்கள்

புதிய பென்ஷன் திட்டம்

கட்டுப்பாடற்ற நேரடி அன்னிய முதலீடு

தனியார்மய ஊக்குவிப்பு

போன்ற நடவடிக்கைகளின் காரமணமாக அடித்தட்டு மக்களின் அன்றாட வாழக்கை அவலநிலைக்கு தள்ளப்பட்டது.

## பெரியாரின் மே தின செய்தி

"மேதின ஞாபகம் ஏகாதிபத்திய ஆட்சிக்கல்ல, செல்வத்திற்கும் சம்பளத்திற்கும் அல்ல, கொடுங்கோன்மைக்கும் அல்ல. உலக மக்களனைவரும் உண்டு உடுக்கவும், இருந்து வாழவும், சந்ததி விருத்தி செய்யவும், அந்த சந்ததியர் உலக சுகபேற்றை பெறவும் செய்யும் தியாகமாகும் என்று 1934ஆம் ஆண்டு தந்தை பெரியார் சொன்னது இன்றும் நாம் நடைமுறையில் கொள்ள வேண்டியுள்ளது.

சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் மக்களின் ஒற்றுமை துண்டாடப்படும் கொடும் சூழல்.

கருத்துரிமை பேச்சுரிமை ஏற்பட்டுள்ள கடும் சவால்.

அறிவியலுக்கு நேர்மாறான மூடநம்பிக்கையை ஆதரிக்கும் பிற்போக்குத்தனம்

போன்ற சவால்களை முறியடிக்க தேசத்தின் மீது அக்கறை கொண்ட ஒவ்வொரு உழைப்பாளியும் முழு முதற் கடமையாக கொள்ளவேண்டும்.

கொரோனா தீ நுண்மி பெருந்தொற்று காலத்தில் சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து அவர்கள் பக்கம் நிற்க வேண்டிய மத்திய அரசு,

இந்திய திருநாட்டின் சொத்துக்களான சுரங்கங்கள், துறைமுகங்கள், விமான போக்குவரத்து, விண்வெளித் துறை, ரயில்வே, இந்திய தொலைதொடர்பு நிறுவனம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், வங்கிகள் என்று சகலத்தையும் தனியாருக்கு விற்க இலக்கு நிர்ணயித்து, நாடாளுமன்றத்தில் விவாதம் கூட செய்யாமல் தன்னிச்சையாக முடிவெடுக்கும் போக்கை பார்க்க முடிகிறது.

அதல பாதாளத்தில் தொலைந்து போன தங்கள் வாழ்க்கையை தேடிக்கொண்டிருக்கும் தொழிலாளர்கள் ஒருபுறம்... பெருந்தொற்று காலத்திலும் பல லட்சம் கோடி ரூபாய்கள் கூடுதலாக லாபம் பார்த்து சொத்துக்கள் சேர்த்துக்

கொண்ட அம்பானிகளும், அதானிகளும் இன்னொருபுறம்...

தமிழகத்தை பொறுத்தவரை தங்கள் உயிரையும் துச்சமென கருதி மக்களை நோய்த் தொற்றிலிருந்து காப்பாற்றிய அரசு ஊழியர்களின் நீண்ட கால நிலுவை கோரிக்கைகளான,

## புதிய பென்சன் திட்டம் ரத்து

அரசு துறைகளில் காலியாக 4 லட்சம் காலிப் பணிய நிரப்புதல்

முடக்கப்பட்ட அகவிலைப்படி, சரண்டர் உள்ளிட்டவைகளை மீண்டும் வழங்கக் கோருதல்

சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர்கள், கணினி இயக்குனர்கள், எம்ஆர்பி செவிலியர்கள், தினக்கூலி, அவுட்சோர்சிங் உள்ளிட்ட ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம்,

சாலைப் பணியாளர்களுக்கு 41 மாத பணிநீக்க காலத்தை முறைப்படுத்தல்

உள்ளிட்ட கோரிக்கைகளை அரசிடம் பேசி தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் போராட்டத்தில் வழக்கம்போல் உழைப்பாளி வர்க்கம் தனது தேச பக்தி கடமையாற்றும் என்று மே நாள் சூளுரை ஏற்போம்.

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்"

என்ற மாமேதை மார்க்சின் வழியின் புது சமுதாயம் படைப்போம்.

- **ஆர்.நடராஜன்**, கிருஷ்ணகிரி

---

## மன்னரோ மாளிகையில் மக்களோ வீதிகளில்

ஓநாய்கள் கூக்குரலிடும் அந்தோ
ஓர் மயான இரவில்
சொல்லாமல் அறிவித்த
செல்லா பணத்தை மாற்ற
அப்பாவிகள் வந்தாரே அன்று வீதிக்கு
உலக நாடுகளில் இல்லாத
உச்சபட்ச வரிவிதிப்பு
தொழிற்சாலைகள் முடங்கின
தொழிலாளிகள் வந்தாரே அன்று வீதிக்கு
ஆடுமேய்க்கும் தொழிலாளியும்
அன்றாடங் காய்ச்சிகளும்
அஞ்சு பத்து சேர்த்து வச்சு
வங்கியில போட்டு வச்சா
வங்கி சேவை பிடித்தமாம்
அய்யோ என்று அலறிக்கொண்டு
அலைகிறாரே வங்கிகளை தேடி
நீரவ் மோடிக்களுக்கும் மல்லையாக்ளுக்கும்
கோடிகோடியாய் கடன் கொடுத்து
திருப்பி செலுத்தாத கேடிகளை தேடி
கோடி கோடியாய் செலவழித்து
அலையுறாங்க அண்டை நாடுகளில்
மக்களேல்லாம் வீதியிலாம்
மன்னன் மட்டும் மாளிகையிலாம்
கொரோனா முதல் அலைத் தொற்றில்
காப்பாற்ற திறனின்றி
கைகழுவி விட்ட அரசாங்கம்
மூச்சுத்திணறி மெல்ல எழுந்து
மிச்சமீதி உயிரையும் காப்பாத்தி வச்சிருக்க...
அரசியல் பிரச்சாரங்களும் கும்பமேளாக்களும்
ஏகபோக ஊட்டச்சத்தை வாரி வழங்கிட
உறுதிமிக்க கொரோனாவாக உருமாறியதே
இன்னோரு கொடுமையை இந்தியா தாங்குமா
இரண்டாவது அலை சுனாமியாய் தாக்க
பெத்தவங்களையும் பிள்ளைகளையும்
கட்டிய மனைவியையும் காப்பாற்ற
தன்னுயிரையும் மறந்து தேடி தேடி
அலைகிறாரே மருந்துகளுக்காக
உயிர்காக்கும் ஆக்ஸிஜனுக்காக
உருளைகளை கையில் ஏந்தி
ஓடுறாங்களே ஆலைகளை தேடி
ஈவு இரக்கமின்றி கொத்துக்கொத்தாய்
கொல்வது கொரோனா மட்டுமல்ல
குடிமக்களை காக்காத
கொடுங்கோல் அரசும்தான்
ஊட்டச்சத்து உணவு இல்லை,
மருத்துவமனைகளில் இடமில்லை,
மூச்சுவிடவும் ஆக்ஸிஜன் இல்லை,
மருந்துக்கூட மருந்து இல்லை
செத்தாலும் தகன மேடை இல்லை
தடுப்பூசிக்கும் தட்டுப்பாடு
யாரிடம் சொல்வது எங்கள் கூப்பாடு
வாக்களித்த மக்களுக்கு வாய்க்கரிசி போடும்
வக்கற்ற அரசுகளினால் இன்று நாடே சுடுகாடு
எதேச்சதிகாரம் இராணுவத்திற்கு நிதி ஒதுக்கும்
மக்களதிகாரம் மருத்துவத்திற்கு நிதி ஒதுக்கும்
எல்லாம் ஒருநாள் மாறும்போது
ஏதேச்சதிகாரங்கள் தூக்கியெறியப்படும் -

- **ஆர்கலி**

# நூல் மதிப்புரை

*தமிழ் இலக்கிய உலகின் நன்முத்து*

*கிருஷ்ணன் என்றொரு மானுடன்..*

*புதினம்*

*- ப.ஜீகாருண்யன்*

*சீதை பதிப்பகம், சென்னை 5.*

*விலை ரூ 200. பக்கங்கள் 392.*

மகாபாரதம் என்னும் இதிகாசத்தில் கிருஷ்ணன் அவதார புருஷனாக.. கடவுளாக சிருஷ்டிக்கப் படுகிறான். அவனது கீதோபதேசம் வர்ணாசிரம தர்மத்தை உயர்த்திப் பிடிப்பதாயினும் பக்தர்கள் மத்தியில் மிகவும் பிரசித்தி பெற்றது. அத்தகைய ஸ்ரீ கிருஷ்ணனை மானுடனாக பாவித்து ப.ஜீவகாருண்யன் அற்புதமான ஒரு நாவலை எழுதியுள்ளார்.

" மனிதனாகப் பிறந்து வளர்ந்து சாதனைகள் புரிந்து மனிதனாக மாயும் கிருஷ்ணனை முழுமைப்படுத்திச் செல்வதே இந்நாவலின் தனித்தன்மை" என பதிப்புரையில் முன்மொழிவதை வழிமொழியலாம்.

"மகாபாரதக் கதைதானே, பிற மொழியில் நாம் படிக்காத வேறு எதை புதுமையாக நூலாசிரியர் சொல்லப் போகிறார் என்று நினைத்து இருபது, முப்பது பக்கங்களைப் படிப்பதற்குள் நம்மை ஆவேசமாக உள்ளிழுத்துச் செல்கிறது நாவலின் உத்தி" என குறிஞ்சிவேலன் தமது அணிந்துரையில் கூறியிருப்பது அனுபவப்பூர்வ உண்மை.

மகாபாரத இதிகாசம் யாவரும் அறிந்ததே. ஆயினும் தமிழ் இலக்கியங்கள் மூலம் வெவ்வேறு கோணங்களில் இதிகாசத்தை உள்வாங்குவதும் குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளலும் நன்று.

அவ்வாறே இப்புதினத்தின் மகாபாரதக் கதையை அலசாமல் 'கிருஷ்ணன் என்றொரு மானுடன்'

எனும் படியான கதைசொல்லலின் நேர்த்தி, சிறப்பம்சங்கள் ஆகியவை குறித்துப் பேசலாம்.

கிருஷ்ணன் தன் வரலாறு மட்டுமன்றி மகாபாரதக் கதையைச் சொல்பவனாகவும் முன்னிறுத்தப்பட்டு அதன் வழி வெற்றி கண்டிருக்கிறார் ப.ஜீவகாருண்யன்.

அவ்வாறான தன் வரலாற்றில் தான் கடவுளின் அவதாரம் என்றோ பரமாத்மா என்றோ எங்கும் சொல்லாமல் துவக்கம் முதல் முடிவு வரை தன்னை மானுடனாகவே கிருஷ்ணன் வழி காட்சிப்படுத்தியுள்ளது சிறப்பு.

கிருஷ்ணன் தான் ஒரு பெண்?பித்தன் என்பதையும் சம காலத்து அரசர்கள் முதல் சாமானியர்கள் வரை ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன்? வாழ்வது ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதி என்பதையும் ஆங்காங்கே நிறுவுவதைப் பார்க்க முடிகிறது.

"கன்னிமலர்கள் கிருஷ்ணன் என்னும் கரிய வண்டினைத் தேடி வந்தன என்பதுதான் உண்மையாக இருந்தது; கூடவே கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் பெரும் வசதி படைத்த நந்தகோபர் மகன் என்னும் பின்புலமும் சேர்ந்து நின்றது."

"கலவியைப் பழுதறக் கற்றுத் தந்தாள் ராதை"

"காலம் என்னைப் பல்வேறு பெண்களின் மடியில் புரட்டிப் போட்டு வேடிக்கை பார்த்தது"

"எட்டு மனைவியருடன் மற்றும் ஏராளம் பெண்களுடன் வாழ்ந்து பழகியவன். ஆனாலும் களம் கண்டு போராடி நான் வெற்றி பெற்று வந்த பெண்களே என் காதலுக்குரியவர்களாக நிலைக்கின்றனர்"

"ருக்மணி, சத்யபாமா, சத்யவதி, ஜாம்பவதி, காளிந்தா, மித்திரவிந்தை, நீலாவதி என்கிற பத்ரா, லஷ்மணை என்று நான் விரும்பிக் கைப்பிடித்த இந்த எட்டுப் பெண்களில் வேறுபட்டவர்களாக நரகாசுரனின் கொடும்பிடியில் சிக்கிக் கொண்ட துவாரகையில் பல குடும்பப் பெண்களும் எனது மனைவியர் பட்டியலில் இடம் பெறும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திய காலம் கிருஷ்ணன் ஒரு பெண் பித்தன், கிருஷ்ணன் பெண்களின் இரட்சகன் என இருவேறு வகையில் மக்கள் மத்தியில் என் பெயரை அடையாளப்படுத்தி வேடிக்கை பார்த்தது."

போன்ற கிருஷ்ணனின் கூற்றுகள் அவனொரு பெண் பித்தன் என்பதை நிறுவுகின்றன.

"வாரணாவத மாளிகையில் பாண்டவர்கள் எரிந்துவிட்ட துயரத்தின் பின்னணியில் நானும் சுயம்வரத்தில் கலந்து கொள்ளாத நிச்சயத்தில் திரௌபதியின் சுயம்வரத்தில் உனக்கு வெற்றி கிடைக்கும்"

என துரியோதனனிடம் பலராமன் கூறுவதன் மூலமும்..

"கருப்புக் கட்டழகி திரௌபதை அத்தை மகன் அர்ச்சுனனின் மனைவியாகிவிட்ட காரணத்தினால் தான் எனது நெஞ்சத் திரையில் தீட்டி வைத்திருந்த அவளின் நேரிய சித்திரத்தை 'மன்னித்துவிடு சகோதரி' என்னும் வேண்டுதலுடன் மெல்லத் துடைத்தழித்தேன்" எனும் கிருஷ்ணன் வாய்மொழி மூலமாகவும் எத்தனை பெண்களை அடைந்தாலும், மணந்தாலும் அடங்காத காமுகனாகவே கிருஷ்ணன் தெரிகிறான்.

"சூதாட்ட விளைவுகளைக் கேட்டு அதிர்ந்து போனேன்"

என இப்புதினத்தில் கூறும் கிருஷ்ணனைத்தான் துச்சாதனன் துகிலுரிந்தபோது திரௌபதிக்கு தமது சக்தி மூலம் சேலைகள் வழங்கியதாகக் கற்பிதம் செய்யப்படுகிறது. மகாபாரதத்தையொட்டிய தெருக்கூத்துகளிலும் காட்சியாக்கப்படுகிறது.

"பீமனுக்கும் இடும்பன், மகன் கிர்மீரன் போன்றவர்களுக்கும் இடையே இயல்பாக நடந்த சண்டைகளெல்லாம் பீமன் மரக்கிளையால் பல் துலக்கினார்..பகாசூரனுக்கு வண்டி நிறைய எடுத்துச் சென்ற உணவை அவனே உண்டான். சூரனை பனை மரத்தைப் பிடுங்கி அடித்தான் என்றெல்லாம் இயல்புக்கு மீறியவை. மக்கள் மத்தியில் விசித்திர சித்திரங்கள் உலா வர ஆரம்பித்துவிட்டன" என கிருஷ்ணன் கூறுவது உற்று நோக்கத் தக்கது.

தூது செல்லும் கிருஷ்ணனை வரவேற்க பீஷ்மர், கிருபர், துரோணர், விதுரர் முதலான பெரியோர்கள் எதிர்கொண்டு வரவேற்றது மானுடன் கிருஷ்ணனுக்கு மகிழ்வைத் தருகிறது. ஆயினும் கௌரவர்களின் ஏச்சிலும் பேச்சிலும் தாக்குதலிலும் நிலைகுலைந்து போன மானுடன் கிருஷ்ணன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாவலர்களோடு சென்றதனால் அவர்களால் காப்பாற்றப்பட்டு சாதுர்யமாக வெளியேறுவது சிறப்பாக காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

மகாபாரத யுத்தத்தின் போது பாசறையில் ஓய்வெடுக்கும் வேளையில் வந்த அபிமன்யுவிடம்.."அபி.. தூக்கம் பொங்குகிறது. இமைகள் திறக்க மறுக்கின்றன. எதையும் நாளை இரவு பொறுமையாக பேசிக் கொள்ளலாம். போய்வா என்று விலக்கினேன். அன்றைய இரவுதான் அபிமன்யுவின் கடைசி இரவு என்பதை அறியாதவனாக..' என வெளிப்படுத்திக் கழிவிரக்கம் கொள்கிறான் மானுடன் கிருஷ்ணன்.

தெய்வ நிலையிலிருந்து விலக்கி மானுடனாக கிருஷ்ணன் காட்டப்பட்டாலும் வருணாஸ்ர தர்மத்தை உயர்த்திப் பிடிக்கும் நிலையில் கிருஷ்ணனிடம் எந்த மாற்றமும் இல்லை என்பதையும் இப்புதினத்தில் காண முடிகிறது.

மகாபாரத? இரவுப் போரில் கடோத்கஜன் உள்ளிட்ட காட்டரக்கர்களை கௌரவர்கள் கொன்று குவித்ததை அறிந்த பாண்டவர்களின் பாசறையே துக்கத்தில் இருந்தபோது.."பிராமணர்களை வெறுக்கின்ற காட்டரக்கர்களில் ஒருவன் கொல்லப்பட்டதற்கு யாராவது கவலைப்படுவார்களா? கர்ணனின் 'வைஜெயந்தி' கடோத்கஜனைக் கொன்றதால் சக்திமிக்க கர்ணனின் 'வைஜெயந்தி' ஆயுதத்திடமிருந்து அர்ச்சுனன் தப்பித்தான் என நியாயப்படுத்தினான் கிருஷ்ணன்.

கிருஷ்ணனிடம் யதுகுல வரலாறு கூறும்போது நாரதர்.."பிராமண கோபம் பொல்லாதது எனும் புரிதலில் மகள் சர்மிஷ்டையை தேவயானிக்கு அடிமையாக்குகிறான் விருஷவர்பா" எனும்போதும் அக்கால பிராமணீயம் வெளிப்படுகிறது.

தூது சமயத்தில் கர்ணனைத் தனியே சந்தித்த கிருஷ்ணன்..'நேற்றுத்தான் அத்தையிடம் உனது பிறப்பு ரகசியத்தைக் தெரிவித்தேன். அத்தையும் உன்னைப்போலவே அதிர்ந்து போயிருக்கிறாள். உன்னை நேரில் சந்தித்துப் பேச வேண்டும் என்றாள். மனதறிந்த தெளிவில் கர்ணனிடம் கூசாமல் பொய்யுரைத்தேன் என்று கர்ணனிடம் சொன்ன கிருஷ்ணன்..

"கர்ணன் எனது மகன் என்னும் செய்தி எனக்குப் புதிதல்ல. கர்ணன் எனது மகன் என்னும் உண்மையில் நடக்க இருக்கும் யுத்தத்தில் நான் கர்ணன் அளவில் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறு" என குந்தி சொல்லும்போது சாதாரண மானுடன் நிலையிலிருந்து அதிர்ந்து போகிறான் கிருஷ்ணன்.

ராஜசூய யாகம் குறித்த விளக்கம், நரகாசூரனைக் கிருஷ்ணன் வதம் செய்த நாளைத் தீபத் திருநாளாகக் கொண்டாட கிருஷ்ணனின் மனைவியும் தேரோட்டியுமான சத்யபாமாவின் வேண்டுகோள், மகாபாரதப் போரின் அவசியம் குறித்து திரௌபதியின் நீண்ட அறச்சீற்ற உரை, குதிரைகள் குறித்த நகுலனின் ஞானம், அஸ்வமேதயாகம் குறித்த நூலாசிரியர் விளக்கம் ஆகியவை சிறப்புக்குரியன.

புதினம் என்றாலே வர்ணனைகளும் அழகியலும் பின்னிப் பிணைந்திருக்கும். இப் புதினத்திலும் அவற்றுக்குப் பஞ்சமில்லை.

வயதான குந்தியை வர்ணிக்கும் நூலாசிரியர்.."வெயிலில் பிடுங்கி எறிந்து பல நாட்கள் ஆன வள்ளிக்கிழங்கைப் போல வற்றிச் சிதைந்து போயிருந்தாள். பளபளத்துக் கிடந்த முன் வரிசைப் பற்களில் மேலும் கீழுமாக இரண்டு கொட்டிவிட்ட நிலையில் ஒரு காலத்தில் பூரித்து சதை மேவித் திரண்டிருந்த கருத்த கன்னப் பரப்பு முதுமை சுருக்கங்களுடன் உட்குழிந்து ஒடுங்கியிருந்தது." என்கிறார். இதே நூலாசிரியர் தான் இந்நாவலுக்குப் பின்னால் எழுதிய 'குந்தி' நாவலில் அவளது யௌவனத்தையும் காம வேட்கையையும் வர்ணித்து கனிச்சாறாகப் பிழிந்து கொடுத்துள்ளார்.

"முற்றி முதிர்ந்து கனிந்த சூரியன் சுட்டெரிக்கும் தனது இயல்பிற்கு மாறாக மஞ்சள் நிறம் பொதிந்து தகதகக்கும் தங்கத் தட்டாகக் காணும் கண்களுக்குள் குளிர்மை பாய்ச்சிக் கொண்டிருந்தான். அடி வானப் பரப்பில் ஏழு வண்ணச் சீர்மையில் சிந்தனையைக் கிறங்கச் செய்யும் நாணற்ற அழகிய வானவில்லின் பின்னால் அடங்கித் தெரிந்த மேகம் பொதிகள் அனைத்தும் கூடுகள் தேடிச் செல்லும் பறவைகள் கூட்டங்களின் சிறகடிப்பில் சீர் குலைந்து கலைந்து புதிய புதிய உயிர்ச் சித்திரங்களாக புதுப் பிறவி கொண்டு புலன் மயக்கி வியக்க வைத்தன"

இக்காட்சி கிருஷ்ணன் கர்ணனுடன் தனித்துப் பேச சென்று கொண்டிருக்கும் போது கிருஷ்ணன் கண்ட இயற்கைக் காட்சி.

"துரியோதனன் திருந்தும் வகையில் அடுத்தடுத்துப் பெரியவர்கள் சொன்ன அறவுரைகள் அனைத்தும் வெயிலுக்கு ஆட்பட்ட பாறை மேல் விழுந்த விதைகளாகப் பயனற்றுப் போயின"

இவை மட்டுமல்ல..

போர்க் களக் காட்சிகளில் நூலாசிரியர் வார்த்தைகளால் அம்புப் போர் நிகழ்த்தியுள்ளார்.

"அர்ச்சுனனின் அதிரடி அம்பு வீச்சுக்களை எதிர்கொள்ள இயலாமல் களம் முழுவதும் ஆங்காங்கே குவியல் குவியலாக சேர்ந்து கிடந்த உடல்களை மயானத்திற்குக் கொண்டு செல்வதற்காக காகர்களும் சண்டாளர்களும் விரைந்து வந்த காட்சியைக் காண விருப்பமற்ற சூரியன் வேகவேகமாக மேலைக் கடலில் மூழ்கித் தன்னை மறைத்துக் கொண்டது. அன்றைய போரின் அளவிலான உயிர்ச் சேத விளைவில் கௌரவ வீரர்களின் நெஞ்சங்களைச் சுற்றிச் சூழ்ந்து வரும் இருள் போல பயம் கௌவியது."

இப்படி 18 நாள் போரிலும் நூலாசிரியரின் வார்த்தைகள் விரவிக் கிடக்கின்றன.

மகாபாரதப் போரில் கீதோபதேசம் என்ற பெயரில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் கூறுபவையாக இப்பூவுலகிற்கு பகவான் உபதேசித்தது என ஏதும் இப்புதினத்தில் இடம் பெறவில்லை. கிருஷ்ணன் வாக்கு தெய்வ வாக்கல்ல..கிருஷ்ணனும் சராசரி மானுடன் தான் என்பதைப் புதினம் முழுவதும் நூலாசிரியர் கிருஷ்ணன் வாய் வழியாகவே நிறுவுவது சிறப்பம்சம்.

துரோணரைத் திருஷ்டத்யும்னன் வதம் செய்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத அர்ச்சுனன், "ஆச்சாரியரின் தலையை அறிவிழந்து வெட்டி திருஷ்டத்யும்னன் அநியாயம் செய்து விட்டான். பத்து யாகம் செய்தாலும் தீராது" என சினமுறுவதில் பிராமணியம் வெளிப்படுகிறது.

மகாபாரதப் போரின் வெற்றி குறித்த கொண்டாட்டத்தில் கடோத்கஜன் போன்ற ஒடுக்கப்பட்ட தாழ்ந்த குல வீரர்களின் பங்களிப்பு புறக்கணிக்கப்பட்டதைக் காண முடிகிறது. தீண்டாமையைக் கடைப்பிடிப்பதுதானே மனுதர்மம்.

கர்ணன் கொல்லப்பட்டதற்குப் பாண்டவர்கள் ஹோமகுண்டம் மூட்டி பிராமணர்களுக்குத் தாராளமாக பொன்னும் பொருளும் வழங்கியதையும் குறிப்பிட்டுச் சொல்கிறார் நூலாசிரியர்.

மகாபாரதப் போர் என்பது மேல்தட்டு அரசர்கள், அரசவையைக் காத்த பிராமணர்கள், குல குருக்கள் என குறிப்பிட்ட ஆதிக்க வர்க்கத்தின் சுகங்களுக்கான நெறி மீறல். பேரழிவு என்பது எளிய மக்களான போர்ப்படையினர்க்கும் யானை,குதிரை போன்ற போர் விலங்குகளுக்கும். போர் என்ற காரணம் காட்டி எளிய மக்களிடம் அளவு கடந்த வரி வசூல் செய்யப்பட்டது இப்புதினத்தில் பதிவாகியுள்ளது குறிப்பிடத் தக்கது.

"அத்தனைப் பொற்காசுகளிலும் அழியாமல் உதிர வாடை" எனக்கூறி மகாதான விழாவில் சார்வாகன் பொற்காசுகளை எரிப்பது உச்சம்.

ஆனால் உண்மை சுடுமல்லவா? சார்வாகனே எரித்துக் கொல்லப்படும் கொடுமையும் அரங்கேறுவதைக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதும்? நூலாசிரியரின் குறிப்பிடத்தக்க பாராட்டுக்குரிய அம்சம்.

போருக்குப் பின்னரும் அஸ்வமேத யாகம் என்ற பெயரில் அஸ்வமேத குதிரை சித்திரவதைக்கு உள்ளாவதும் அதன் குருதி குடித்தலும், அக்குதிரையை திரௌபதி உட்பட பாண்டவர்களின் மனைவிகள் புணர்வதும் அருவருக்கத்தக்கவை. மகாபாரத இதிகாசத்தில் பாமரர்க்கு மறைக்கப்பட்டவை நூலாசிரியர் மூலம் உணர முடிகிறது.

"இணையற்ற இந்திய இதிகாசங்கள் வழியில் பரந்துபட்ட பலகோடி இந்திய மக்களின் சிந்தனைத் தளத்தில் கடவுள்களாக நிலைப்படுத்தப்பட்டுவிட்ட ராமன், கிருஷ்ணன் ஆகிய இரண்டு முதன்மைப் பாத்திரங்களில் மகத்துவம் மிகுந்த மகாபாரதத்தில் முக்கியப் பாத்திரமாக சித்தரிக்கப்படும் கிருஷ்ணன் ஆச்சரியங்கள் நிறைந்த இயல்பான மனிதனாக எப்படி வாழ்ந்து மறைந்தான்? என்று சொல்லும் முயற்சி எத்தனை சிரமமானது என்பதைக் காரியத்தில் இறங்கிய பிறகே உரை முடிந்தது."

எனும் நூலாசிரியர் ப.ஜீவகாருண்யனின் கூற்றுப்படி மூன்றாண்டுகள் மூச்சையடக்கி முத்தெடுத்திருக்கிறார். இம்முத்து தமிழ் இலக்கிய உலகின் நன்முத்து எனின் மிகையன்று.

**- பெரணமல்லூர் சேகரன்**



தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்தின் 38வது அமைப்பு தின கொடியேற்று விழா 02.05.2021 அன்று ஈரோடு ஐடிஐ முன்பு நடைபெற்றது. கிளைத்தலைவர் சுமதி கொடியேற்றி வைத்தார். மாநில துணைத் தலைவர் மு.சீனிவாசன் சங்க வரலாறுகள் குறித்து விளக்கவுரையாற்றினார்.

# நாகை, கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்பு

தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள கீழ்வேளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. நாகை மாலி அவர்களையும், நாகப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆளூர் ஷாநவாஸ் அவர்களையும் 02.05.2021 அன்று இரவு தேர்தல் முடிவுகள் வந்தவுடன்...





தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல், மாவட்ட துணைத் தலைவர் மா.ராணி, மாவட்ட இணைச் செயலாளர் என்.புகழேந்தி, முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

■

# உலக மே தினம் குறித்து பிரெடெரிக் எங்கல்ஸ்

மே தினமாம் மே தினம்
ஏழைகட்கு மேதினியில்
எல்லா நாளும் மே தினமே!

உழைப்பவன் தான் உலகத்திலே
ஏழை என்ற நிலை மாறும்
நாள் என்று வரும் கூறு . . . . . (மே தினமாம்)


உழைப்பாளி
இல்லையென்றால்
உலகம் சுழலப் போவதில்லை

உழைப்பும் வளர்ச்சியும் ..
உடலும் உயிருமாம்
இதை உணர்ந்தால் . . . . . (மே தினமாம்)

மழை மறந்து போனாலும்
வியர்வை சிந்தி விளைய வைக்கும்
விவசாயத் தோழர்கட்க்கு (மே தினமாம்) . . .

- படைக்கவி பாகருதன்

உலகெங்கிலுமுள்ள பாட்டாளி மக்களுக்கு மே தினம் ஒரு ஈர்க்கும் முனையாக மரியது. மே தின ஆர்ப்பாட்டங்களின்போது எட்டு மணி நேர வேலை நாள் என்ற முக்கியமான கோரிக்கையோடு மற்ற பல அடிப்படை கோரிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்துமாறும் தொழிலாளர்கள் அழைக்கப்பட்டார்கள். உலகத்தொழிலாளர் ஒற்றுமை, எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஓட்டுரிமை, ஏகாதிபத்திய போர் மற்றும் காலனி ஆதிக்க எதிர்ப்பு, தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்தாபனம் கட்டும் உரிமை போன்றவை அந்தக் கோரிக்கைகளில் சிலவாகும். உலகமே தினம் குறித்து காரல் மார்க்ஸின் நெருங்கிய நண்பர் பிரெடரிக் எங்கெல்ஸ் கருத்துக்களை அனைத்து தோழர்களின் பார்வைக்கு.



கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை ஜெர்மன் நான்காவது பதிப்பு 1890, மே 1-ஆம் தேதி எங்கல்ஸ் முகவுரை எழுதுகிறார். அதில் உலக பாட்டாளி வர்க்க ஸ்தலங்களை விமர்சிக்கும்போது முதலாவது உலகமே தினம் குறித்த முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். ‘நான் இந்த வரிகளை எழுதிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பாட்டாளி வர்க்கம் தனது பலத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அது முதன் முறையாக ஒரே கொடியின் கீழ் ஒரு படையாக எட்டு மணி நேர நாள், சட்டமாக வேண்டும் என்ற ஒரே உடனடியான நோக்கத்திற்காகத் திரண்டிருக்கிறது. நாம் பார்க்கக் கூடிய இந்த அற்புதமான காட்சி உலகெங்கிலுமுள்ள முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் எல்லா நாடுகளிலுமுள்ள பாட்டாளிகளும் இணைந்து விட்டனர் என்ற உண்மையை உணரச் செய்யும் மார்க்ஸ் மட்டும் இந்த காட்சியை பார்ப்பதற்கு என்னுடன் இன்று உயிரோடிருந்தால் . . .”

## தொழிலாளர் பேரணி 1882

உலக முழுவதும் இப்போராட்டம் ஒரே சமயத்தில் நிகழ்ந்தது. இது உலகத் தொழிலாளர்களின் புரட்சிகர உணர்வையும் சிந்தனையையும் ஆழமாகத் தொட்டது. பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மேலும் மேலும் அதிகமான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

*1893*ஆம் ஆண்டு அகிலத்தின் மாநாடு ஜுரிச்சில் நடைபெற்றது. அதில் எங்கெல்ஸ் கலந்து கொண்டார். அப்போது நிறைவேற்றப்பட்ட மே முதல் நாள் தீர்மானத்தில் சேர்க்கப்பட்ட சேர்க்கை தொழிலாளர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

‘உழைக்கும் வர்க்கத்தின் பிரதான விருப்பம் சமூக மாற்றதின் மூலம் வர்க்கப் பாகுபாடுகளை அழித்தொழிப்பது மற்றும் உலகம் முழுவதும் எல்லா மக்களுக்கும் அமைதியை ஏற்படுத்துவது ஆகும். மே தின ஆர்ப்பாட்டங்கள் எட்டு மணி நேர வேலை நாளுக்காக மட்டும்லாமல் மேற்கூறிய காரணங்களுக்கும் பயன்படவேண்டும்.”

மே தினத்தை போராட்ட தினமாக கொண்டாடுவதற்கு பதிலாக கேளிக்கை மற்றும் ஓய்வு தினமாக மாற்றுவதன் மூலம் பல கட்சிகளின் சீர்திருத்த தலைவர்கள் மே தினத்தின் முக்கியத்துவதத்தை சீர்குலைக்க முயற்சித்தார்கள். இதற்காக மே தினத்தை அடுத்து வரும் ஞாயிற்றுக் கிழமை தள்ளி வைக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஞாயிற்றுக் கிழமை ஏற்கனவே விடுமுறை நாள். எனவே அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம். சீர்திருத்த தலைவர்களுக்கு மே தினம் பார்க்கில் விளையாடுவதற்கும், கலை நிகழ்ச்சிக்குமான உலக விடுமுறை நாளாகும். ஜுரிச் மாநாடு மே தினம் முதலாளித்துவச் சுரண்டல், அடிமைத்தனம் வர்க்க வேறுபாடுகள் ஆகியவற்கை அழித்தொழிப்பதற்காக போராடும் நாள் என்று தீர்மானித்தது. இந்த தீர்மானம் இந்த தலைவர்களை சிறிதளவில்கூட பாதிக்கவில்லை. ஏனெனில் அகிலத்தின் முடிவுகள் தாங்களை கட்டுப்படுத்தும் என்பதையே அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை.

சர்வதேச சோஷலிச மாநாடு என்பது அவர்களை பொறுத்தவரை போருக்கு முன்பு ஐரோப்பிய தலைநகரங்களில் நடந்த பல்வேறு மாநாடுகளைப் போல சர்வதேச நட்பு மற்றும் நல்லெண்ணத்திற்கான ஒரு கூட்டமாகவே இருந்தது. பாட்டாளி வர்க்க நடவடிக்கைகளை அவர்கள் முறியடிக்கவும் அலட்சியப்படுத்தவும் எல்லா வேலைகளையும் செய்தார்கள். தங்களுக்கு ஒத்துவராத மாநாட்டுத் தீர்மானங்களைக் கிடப்பிலே போட்டார்கள். இருபதாண்டுகளுக்குப்பின் இந்த சீர்திருத்தவாத தலைவர்களின் சோஷலிஸமும் சர்வதேசியமும் நிர்வாணமாக்கப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டது. *1914*-இல் இந்த சர்வதேச மேடை சீர்குலைந்தது காரணம் இது தோன்றிய நாளிலிருந்தே இதன் அழிவு சக்தியாக தவறான பாதையில் அழைத்துச் செல்லக்கூடிய சீர்திருத்தவாத தலைவர்கள்இதனுள்ளே இருந்து வந்தார்கள்.

*1900*ஆம் ஆண்டு நடைபெற்ற அகிலத்தின் பாரிஸ் மாநாட்டில் முந்திய மாநாட்டில் நிறைவேறிய தீர்மானம் மீண்டும் நிறைவேற்றப்பட்டது. மேலும் தீர்மானத்தை வலுப்படுத்தும் வகையில் மே முதல் நாள் வேலை நிறுத்தம் மே தின ஆர்ப்பாட்டத்தை மேலும் பயனுள்ளதாக்கும் என்ற வாக்கியமும் சேர்க்கப்பட்டது. அடுத்து வந்த மே தின ஆர்ப்பாட்டங்கள் மேலும் பலத்தோடு திகழ்ந்தன. ஆர்ப்பாட்டத்திலும் வேலை நிறுத்ததிலும் கலந்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகிக் கோண்டே வந்தது. உலகெங்கிலுமுள்ள ஆளும் பிற்போக்கு சக்திகளுக்கு ஒரு எச்சரிக்கையாக வரக்கூடிய மே தினங்கள் ஒரு சிவப்பு தினமாக மாறியது.

## இந்தியாவில் மேதினம்

அமெரிக்காவில் சிக்காகோ தொழிலாளிகள் ரத்தம் சிந்தி வென்றெடுத்த அந்த மகத்தான உரிமையை உலகத்தொழிலாளிகள் வர்க்கத்திற்கு நினைவுபடுத்தும் நாள் தான் மே முதல் நாள். அத்தகைய சிறப்பான நாளை இந்தியாவில் கொண்டாடப்படவேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் சிங்காரவேலர் முதலில் சென்னையில் ஏற்பாடு செய்து இரண்டு இடங்களில சிறப்பாக நடத்தினார்.

வடசென்னை தொழிலாளர் கூட்டத்தில் தோழர் சிங்காரவேலர், தோழர் எம்.பி.எஸ்.வேலாயுதம், தோழர் பி.நடேச முதலியார் ஆகியோர் எழுச்சி உரையாற்றினார்கள். தென் சென்னை திருவல்லிக்கேணி கூட்டத்தில் சுப்பிரமணிய சிவா, கிருஷ்ணசாமி சர்மா, சங்கர்லால் மற்றும் எம்.பி.எஸ்.வேலாயுதம் பேசினார்கள். சிங்காரவேலர் மேதினம் என்பது தொழிலாளர்கள் வாழ்வில் ஒரு புனிதமான தினமாகும். இந்தியாவிலுள்ள தொழிலாளிகளும் தங்களுடைய நிலைமைக்கேற்றவாறு அதைக் கொண்டாடுவதோடு உலகின் இதர பகுதிகளில் உள்ள தங்களுடைய தோழர்களோடு தங்கள் ஒற்றுமையை உறுதிப்படுத்த வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

இன்று அந்த எட்டு மணி நேர வேலை என்பது கேள்விக்குறியாகி உள்ளது. தொழிலாளர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். தொழிலாளர் வர்க்கம் வருங்காலங்களில் தாங்கள் ஒன்றிணைந்து மீண்டும் போராடினால் மட்டுமே தொழிலாளர்கள் நம் முன்னோர்கள் போராடி பெற்ற உரிமைகளை நம்மால் பாதுகாக்க முடியும்.

**'முயன்றால் முடியாதது இல்லை**<br>**முயற்சிப்போம் முடிவுக்காக**<br>**அல்ல நம் முன்னேற்றத்திற்காக" .**<br>**அனைவருக்கும் தொழிலாளர்**<br>**தின நல்வாழ்த்துக்கள்.**

- **நன்மாறன்**

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, நேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர் மு.அன்பரசு

பொதுச் செயலாளர் ஆ.செல்வம்

மாநில துணைத் தலைவர்கள்
மொ.ஞானத்தம்பி
ஏ.பெரியசாமி
இரா.மாங்களபாண்டியன்
என்.வெங்கடேசன்
மு.சீனிவாசன்
கோ.பழனியம்மாள்

மாநிலச் செயலாளர்கள்
சி.ஆர்.இராஜகுமார்
இரா.ந.நம்பிராஜன்
சி.எஸ்.கிறிஸ்டோபர்
சி.பரமேஸ்வரி
உ.சண்முகம்
தெ.வாசுகி

மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன்


கடித எண். 8/2021

நாள் : 27.04.2021

பெறுநர்

**தலைமைச் செயலாளர்**
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம், சென்னை—600009

**கூடுதல் தலைமைச் செயலாளர்**
நிதித்துறை
தலைமைச் செயலகம், சென்னை—600009

**அரசு முதன்மைச் செயலாளர்**
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத்துறை
தலைமைச் செயலகம், சென்னை—600009

**அரசு முதன்மைச் செயலாளர்**
மக்கள் நல்வாழ்வு(ம) குடும்ப நலத்துறை
தலைமைச் செயலகம், சென்னை—600009

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
வருவாய்(ம)பேரிடர் மேலாண்மைத்துறை
தலைமைச் செயலகம், சென்னை—600009

**அய்யா / அம்மையீர், வணக்கம்.**

பொருள் : தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் — கொரோனா இரண்டாவது அலை அதிதீவிர தொற்று பரவலை கட்டுப்படுத்திட 33 சதவீதம் சுழற்சி முறையில் பணியாற்றிடவும், முன்களப் பணியாளர்களுக்கு ஒரு மாத ஊக்கத்தொகை வழங்கிடவும், தொற்று பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு ரூ.2லட்சம் நிவாரண தொகை மற்றும் இறந்த ஊழியர்களுக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு தொகையும் வழங்கிட கோருதல் — சம்பந்தமாக.

1 ***

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

✆ 28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

கோவிட் 19 எனப்படும் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை அதிதீவிரமாக பரவி வருகிறது. நாளது தேதி வரையில் (27.04.2021) உலகம் முழுவதும் ஏறக்குறை 15 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் இந்தியாவில் மட்டும் 1 கோடியே 75 லட்சம் பேரும் தமிழகத்தில் 11 லட்சம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தின் மொத்த பாதிப்பில் தலைநகர் சென்னையில் மட்டும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10,072 ஆகும். கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தவண்ணம் உள்ளது.

இச்சூழ்நிலையில் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களையும் தொற்று வேகமாக பாதித்து வருகிறது. தமிழகத்தில் அரசுத்துறைகளில் சென்னையில் பணிபுரியும் தலைமை செயலக ஊழியர்கள் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் ஆயிரக்கணக்கில் இந்நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தலைமைச் செயலகத்தில் மட்டும் 100க்கும் மேற்பட்ட ஊழியர்களும் தமிழகம் முழுவதும் 1000க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் அவர்தம் குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்நோய்த் தொற்று பரவும் தீவிரத்தை உணர்த்தும் வகையில் சென்னை மட்டுமல்லாது பிற மாவட்டங்களிலும் இத்தொற்று நாளுக்கு நாள் அதிதீவிரமாக பரவி வருகிறது. இதனால் அரசு ஊழியர்கள் பெரும் அச்சத்திற்கு ஆளாகி உள்ளனர்.

அலுவலகம் வந்து செல்ல நீண்ட தொலைவிலிருந்து வரக்கூடிய ஊழியர்களும், கூட்ட நெரிசலில் பிரயாணம் மேற்கொள்ளக்கூடிய ஊழியர்களும், கொரோனா தொற்றுக்கு ஆளாகக்கூடிய அபாயச் சூழ்நிலை உள்ளதாலும் மேலும் நோய்த்தொற்றின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாலும் அரசு அலுவலகங்களுக்கு பணிக்கு வரும் ஊழியர்களை கொரோனா தொற்றின் தாக்கம் குறையும் வரை 33 சதவீத அளவில் அனுமதித்தால் அது நோய்த்தொற்று பரவுவதை குறைப்பதுடன் போதிய பாதுகாப்புடன் அச்ச உணர்வின்றி அரசு ஊழியர்கள் அலுவலகம் வரவும், ரயில் மற்றும் பேருந்துகளில் பயணிக்கவும் ஏதுவாக இருக்கும் என்று தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

எனவே தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு சென்ற ஆண்டு அறிவித்ததைபோல இவ்வாண்டும் 33 சதவீதம் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பணிபுரியும் வகையில் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழக அரசு கோவாக்சின் மற்றும் கோவிசீல்டு தடுப்பு ஊசி மக்களுக்கு செலுத்தியும்கூட கொரோனா தொற்று இரண்டாவது அலையின் வேகம் அதிகரித்துவரும் சூழலில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நோயாளிகள் நிரம்பி வழிகின்றனர். கொரோனா நோயாளிகளுக்கு உயிர் காக்கும் சிகிச்சைக்கு வழங்கக்கூடிய ஆக்ஸிஜனுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நோயாளிகளுக்கு வழங்கக்கூடிய ரெம்டெசிவர் மருந்துக்கும் தட்டுப்பாடு எற்பட்டுள்ளது. இதனால் தனியார் மருத்துவமனைகளில் லட்சக்கணக்கில் சிகிச்சைக்கு செலவு செய்ய வேண்டியுள்ளது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

© 28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com


எனவே அரசு ஊழியர்களின் பாதுகாப்பு கருதியும், அரசு ஊழியர்களின் சேவை என்பதை முழுமையாக பொது மக்களுக்கு அளிக்கும் வகையிலும் கீழே சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் எங்களது நியாயமான கோரிக்கைகளை உடனடி கவனம் செலுத்தி உரிய உத்தரவுகளையும் ஆணைகளையும் பிறப்பிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

1. கொரோனா தொற்றின் இரண்டாவது அலையின் அதிதீவிர பாதிப்பினை கருத்தில் கொண்டு பாதுகாப்பான பணிச்சூழலில் தனி மனித இடைவெளியை கடைப்பிடிக்கும் வகையிலும் கொரோனா தொற்றிலிருந்து ஊழியர்களை பாதுகாக்கும் வகையிலும் தலைமைச் செயலகம் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களில் 33 சதவீத ஊழியர்களுடன் சுழற்சி முறையில் பணிபுரிய ஆணை வழங்கிடவேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

2. கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக நுட்புனர்கள், மருந்தாளுனர்கள், ஊடுகதிர் நுட்புனர்கள், சுகாதார ஆய்வாளர்கள். வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் பொது சுகாதாரத் துறையில் ஈடுபடும் ஊழியர்கள் உள்ளிட்ட பிற துறை ஊழியர்களுக்கும் நோய்த் தொற்று ஏற்பட்டு இறக்கும் தருவாயில் அவர்களுக்கு ரூ.50.00லட்சம் வழங்குவதாகவும் கடந்த ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்பின்னர் இறந்த ஒரு சில குறிப்பிட்ட அரசு ஊழியர்களுக்கு மட்டுமே ரூ.25.00 லட்சம் வழங்கப்பட்டது. கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு இறந்த பெரும்பாலான அரசு ஊழியர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்படவில்லை. . எனவே கொரோனா தொற்றினால் சிகிச்சை பலனின்றி இறந்த ஊழியர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கிட வேண்டும், அவர்தம் குடும்பத்தில் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசு வேலை வழங்கப்படும் என மாநில அரசு அறிவித்ததை வரவேற்கும் அதே நேரத்தில் நடைமுறைபடுத்திட வேண்டும். இந்த தருணத்தில் ரூ.50.00 லட்சம் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் இந்த கொரோனா தொற்று தடுப்புப் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த ஊழியர்களுக்கு நாளது வரை உரிய நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றோம். கொரோனா நோய்தடுப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபட்டு மரணமடையும் அனைத்து தரப்பு அரசு ஊழியர்களுக்கும் இந்நிவாரணத் தொகையினை வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

3

3. மேலும் ஊழியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு முககவசம், Hand Sanitizer, Zinc Tablets, Multi Vitamins, கபசுர குடிநீர், (COVID 19 ஆரோக்கிய பெட்டகம்) போதுமான அளவில் அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

4. கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நேரடியாக சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவ ஊழியர்கள் அனைவருக்கும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்திடும் வகையில் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் (PPE KIT) வழங்கிட கேட்டுக்கொள்கிறோம்.

5. சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட கொரோனா நோய் தொற்றிற்கு சிகிச்சை அளிக்கும் முன்களப் பணியாளர்களுக்கு ஒரு மாத ஊக்க ஊதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பின்படி இதுவரை யாருக்கும் வழங்கப்படவில்லை. முன்களப்பணியாளர்களுக்கு அரசு அறிவித்த ஒரு மாத ஊக்கத்தொகை வழங்கிட கேட்டுக்கொள்கிறோம்.

உயிர் காக்கும் சிகிச்சை பணிகளிலும் இரவு பகல் பாராமல் கண்துஞ்சாமல் உயிரை பணயம் வைத்து மக்களுக்கு சேவை செய்துவரும் அரசு ஊழியர்களின் மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(மு. அன்பரசு)
மாநிலத் தலைவர்

(ஆ. செல்வம்)
பொதுச் செயலாளர்

**வாசகர் கடிதம்**

ஏப்ரல் - 2021 மாதம் அரசு இதழில் அரசியல் கார்ட்டூன்கள் அனைத்தும் அருமை. தலைவர் மடல் 'தேர்தல் காலத்து இலவச பொய்கள்' மற்றும் பொதுச்செயலாளர் மேசை 'நல்லதொரு மாற்றத்தை நோக்கி தொடர்வோம் நம் பணிகளை' ஆகியவை இந்த ஆட்சியாளர்களின் மோசமான அரசியலும் இதனால் அரசு ஊழியர்கள் வஞ்சிப்படுவதையும் தெளிவாக எடுத்துரைக்கிறது. மேலும் அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளனத்தின் "மீண்டும் பகை முடிக்கும் பணி முடிப்போம்" கட்டுரை அரசியல் களத்தில் நமக்கான மாற்றத்தை ஏற்படுத்த அரசு ஊழியர்கள் என்ன செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. மொத்தத்தில் ஏப்ரல் மாத அரசு ஊழியர் மாத இதழ் அரசியல் விழிப்புணர்வு சிறப்பிதழாக அமைந்து அருமை.

- **ரா. வசந்தி**, மருத்துவத் துறை, சென்னை

சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை – கொரோனா வைரஸ் (Covid-19) நோய்த்தொற்றை தடுக்க தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு – 06.05.2021 முதல் 20.05.2021 வரையிலான காலத்திற்கு புதிய கட்டுப்பாடுகள் – 50 விழுக்காடு பணியாளர்களுடன் இயங்க அனுமதித்தல் – மாற்றுத் திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலகத்திற்கு வருவதிலிருந்து முழு விலக்களித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–3.1)த் துறை

அரசாணை (நிலை) எண்:01

நாள்: 05.05.2021
பிலவ, சித்திரை 22,
திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை) எண்.364, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4)த் துறை, நாள் 03.05.2021.

*****

ஆணை:-

கொரோனா பெருந்தொற்று மிகவேகமாகப் பரவி வரும் இக்காலகட்டத்தில், மேலே படிக்கப்பட்ட அரசாணையில், பேரிடர் மேலாண்மை சட்டத்தின் படி 06.05.2021 முதல் 20.05.2021 வரையுள்ள காலத்திற்கு சில கட்டுப்பாடுகளுடன் தமிழ்நாட்டில் ஊரடங்கு அமல்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறான கட்டுப்பாடுகளுள் அனைத்து அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் அதிகபட்சம் 50 விழுக்காடு பணியாளர்களுடன் இயங்க வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

2. கொரோனா பெருந்தொற்று காலத்தில் மாற்றுத் திறனாளி அரசுப் பணியாளர்களின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு 06.05.2021 முதல் 20.05.2021 வரையிலான காலகட்டத்தில் மாற்றுத் திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலகத்திற்கு வருவதிலிருந்து முழுவதுமாக விலக்களித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா.விஜயராஜ் குமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/ அனைத்து துறைத் தலைவர்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வாயிலாக)

நகல்:-
அரசு செயலாளரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

# தடுப்பூசிகளுக்கு கண்டுபிடிப்பு உரிமை கூடாது

## 34 கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட்டறிக்கை

**கோ**விட்-19 பெருந்தொற்றுக்கு எதிராக, தடுப்பூசி கண்டுபிடிப்பவர்களுக்கு, தனியே கண்டுபிடிப்பு உரிமை (patents rights) அளிக்கக்கூடாது என்று இந்தியாவில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்பட உலகில்உள்ள 34 கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக ஏப்ரல் 19 அன்று கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

கோவிட் 19 பெருந்தொற்று கடந்த ஓராண்டுக்கும் மேலாக மிகுந்த துயரத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்தக் காலத்தில், பல நாடுகளில், பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இந்நோய்க்கு ஆளாகி, தங்கள் உடல் நலத்தை இழந்தும்,தங்கள் வேலைகளை இழந்தும் தங்கள் உயிரையே இழந்தும் இருக்கிறார்கள். மற்றொரு பக்கத்தில், சில நிறுவனங்கள் அத்தியாவசியப் பண்டங்களான உணவு, சுகாதாரத்திற்கான உபகரணங்கள், முகக் கவசங்கள் மற்றும் இறுதியாகதடுப்பூசிகளை நல்ல விலைக்கு விற்று உலகில் பணக்காரர்களிலேயே பணக்காரர்களாக மாறிஇருக்கிறார்கள். முதலாளித்துவ வர்க்கம், தாங்கள் மேலும் கொள்ளை லாபம் ஈட்டக்கூடியவிதத்தில் தொழிலாளர்களைப் பெரிய அளவில் சுரண்டுவதற்கான வாய்ப்பாக, கொரோனாவைரஸ் பெருந்தொற்றை பயன்படுத்திக் கொண்டது.

### இதுவரை வெறும் 2.16 சதவீதம் மட்டுமே!

2020இன் இறுதி வாக்கில் இது தொடர்பாக பல தடுப்பூசிகள் ஏகபோக மருந்துக் கம்பெனிகளால் கண்டறியப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பூசிகளின் திறன் குறித்து பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளபோதிலும், இவற்றில் சில பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ள போதிலும், பொதுவாக அவை கொரோனா வைரஸ் தொற்றை சமாளிப்பதில்வலுவான பங்களிப்பைச் செய்துகொண்டிருக் கின்றன. எனினும், கோவிட் தடுப்பூசி போடப்படுவது தொடங்கப்பட்டு, உலகில் இதுவரை சுமார்2.16 சதவீத மக்களே இதனைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

### சக்தியற்ற முதலாளித்துவம்

தொற்று வியாதிகள் பரவாமல் தடுத்துநிறுத்துவதற்கு பிரதான முறை, அவற்றுக்கு எதிராக விரிவான அளவிலும் வலுவான விதத்திலும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதேயாகும். ஆயினும், முதலாளித்துவம், 21ஆவது நூற்றாண்டில் இந்த அடிப்படை விதியை உலக அளவில் கொண்டுசெல்ல சக்தியற்றதாக இருந்துவருகிறது. இதனை கோவிட்-19வைரஸ் பெருந்தொற்றில் பார்க்க முடிகிறது.

இதற்கான காரணங்கள் தெளிவானவை. ஆயிரக்கணக்கான அறிவியலறிஞர்கள் தங்களுடைய பொது சுகாதார நிதியம் மற்றும் கூட்டு முயற்சிகளின் விளைவாக பல்வேறுவிதமான தடுப்பூசிகளைக் கண்டுபிடித்திருந்தா லும், கடைசியில் அவை மருந்து ஏகபோக நிறுவனங்களால் அறிவுச் சொத்துரிமை (intellectual property) அல்லது கண்டுபிடிப்பு உரிமை (patent rights) என்ற பெயர்களில் பறித்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இன்றைய தினம் தடுப்பூசிகளை ஒரு சில நாடுகள் மட்டும்தான் உற்பத்தி செய்ய முடியும். மிகவும் அதிகாரம் படைத்த ஏகாதிபத்திய நாடுகள் தங்கள் தேவைக்கும் மேலாகவே அவற்றை இறக்குமதி செய்யக்கூடிய அதே சமயத்தில், உலகில் பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள நாடுகள் தங்கள் மக்கள்தொகை முழுவதற்கும் தேவைப்படும் அளவிற்கு இறக்குமதி செய்வதற்கு இயலாத நிலையில் இருக்கின்றன. இவ்வாறு ஒரு நிச்சயமற்ற எதிர்காலம் அவர்களை எதிர்நோக்கி இருக்கிறது. குடிமக்களின் சாவைத் தடுக்க முடியும் என்று தெரிந்தும்கூட அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் அவை திண்டாடுகின்றன.

### சிலர் மட்டும் போட்டுக் கொண்டால்...

இது ஓர் ஆபத்தான போக்காகும். தொற்று நோய்களுக்கான தடுப்பூசிகள் மிகவும் குறைவாக

இருந்து ஒருசிலர் மட்டும் அதனைப் போட்டுக்கொண்டால், கொரோனா வைரஸ் மற்றவர்களிடம் மிகவும் வேகமாகப் பாயும் தன்மை கொண்டதாக மாறும். இதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

கோவிட்-19 வைரஸ் பெருந்தொற்று திடீரென்று உலகிலிருந்து மறையாது. மேலும், முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்டுள்ள சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகள் நமக்குக் காட்டுவது என்னவென்றால், மனிதகுலம் இதுபோன்ற பெருந்தொற்றுகளை வேறு வழிகளிலும் எதிர்கொள்ளும் என்பதேயாகும். கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக வலுவான சிகிச்சை மேற்கொள்ளப்படும் வரை மற்றும் அனைவருக்கும் தடுப்பூசிகள் போடப்படும் வரை கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல்தொடரும். அதுவரையிலும் மனிதகுலம் கொரோனா வைரசால் நோயுற்ற தன்மையுடனும் மற்றும் மரணங்களுடனும் இணைந்தே வாழ்வது தொடரும். எனவே, தொழிலாளர் வர்க்கம் மற்றும் அனைத்து மக்களின் பொதுவான நலனின் அடிப்படையிலும், தொற்றுநோய் களுக்கு எதிராக தடுப்பூசிகள் மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கண்டுபிடிப்பு உரிமை அல்லது அறிவுச் சொத்துரிமை என்பவை தடுப்பூசி உற்பத்தியை அதிகரித்திடாது. மாறாக அவை மக்களுக்கு தடுப்பூசிகள் போடப்படுவதை மந்தப்படுத்திடும்.

ஆனால், நாம் பொது சுகாதாரம் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சனையையும், ஏகபோக முதலாளிகள் கொள்ளை லாபம் ஈட்டக்கூடிய விதத்தில் மற்றும் அவற்றுக்குள் போட்டாபோட்டிஏற்படும் விதத்தில் விட்டுவிடக் கூடாது.

## கம்யூனிஸ்ட்டுகள் என்ன சொல்கிறோம்?

சில நாடுகள் இது தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு ஒருமைப்பாடும், ஒத்துழைப்பும் அளிப்பதுடன், உலகில் பல நாடுகளில்இயங்கும் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளாகிய நாங்கள் கீழ்க்கண்டவாறு கூட்டாகக் கோருகிறோம்:

⋆ கோவிட்-19 சம்பந்தப்பட்ட அனைத்து தடுப்பூசிகள் மீதும் அறிவுச் சொத்துரிமைகள் மற்றும்கண்டுபிடிப்பு உரிமைகள் என்ற பெயர்களில் உற்பத்தியை முடக்குவதைத் தடை செய்திட வேண்டும். இது தொடர்பாக அனைத்து நாடுகளும் சட்டப்பூர்வமாக நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும்.

⋆ பொதுத்துறைகளின் கீழ் தடுப்பூசிகளுக்கான உற்பத்தி, விநியோகம் மற்றும் அமலாக்கம் தொடர வேண்டும். பொது சுகாதார அமைப்புமுறை உடனடியாக விரிவாக்கப்பட வேண்டும்,வலுப்படுத்தப்பட வேண்டும்.

⋆ தடுப்பூசிகளில் ஊக வணிகத்தை கண்டிக்கிறோம். தடுப்பூசிகள் தொடர்பான அனைத்துப் பரிவர்த்தனைகளும் வெளிப்படைத் தன்மையுடன் சர்வதேச அறிவியல் அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும். சர்வதேச ஒருமைப்பாட்டுடனும் ஒத்துழைப்புடனும் இதுதொடர்பாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் போட்டி மனப்பான்மைகூடாது.

⋆ தடுப்பூசிக்கு எதிரான பிரச்சாரம் மற்றும் அறிவியலற்ற பொய்த்தகவல்கள் தீர்மானகரமான முறையில் தடைசெய்யப்பட வேண்டும்.

⋆ மக்கள், சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தை வலுப்படுத்திட வேண்டும். இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஏகபோகங்கள்கொள்ளை லாபம் ஈட்டுவதை நாங்கள் எதிர்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.இவ்வாறு 34 கட்சிகளும் அறிவித்துள்ளன.

இதில் கையொப்பமிட்டுள்ள கட்சிகள் வருமாறு:


(ஆங்கில அகரவரிசைப்படி)

1. ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி,
2. ஆஸ்திரியா தொழிலாளர் கட்சி,
3. பஃஹ்ரைன் முற்போக்கு டிரிப்யூன்,
4. வங்கதேச கம்யூனிஸ்ட் கட்சி,
5. பிரேசிலியன் கம்யூனிஸ்ட் கட்சி,
6. பிரேசில் கம்யூனிஸ்ட் கட்சி,
7. பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சி,
8. பிரிட்டன் புதிய கம்யூனிஸ்ட் கட்சி,
9. பொஹிமயா மற்றும் மொராவியா கம்யூனிஸ்ட் கட்சி
10. பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி,
11. ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி,

12. கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி,
13. ஹங்கேரியன் தொழிலாளர் கட்சி,
14. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்),
15. டூடே-ஈரான்,
16. லக்சம்பர்க் கம்யூனிஸ்ட் கட்சி,
17. மெக்சிகோ கம்யூனிஸ்ட் கட்சி,
18. நார்வே கம்யூனிஸ்ட் கட்சி,
19. பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி,
20. பாலஸ்தீனக் கம்யூனிஸ்ட் கட்சி,
21. பாலஸ்தீன மக்கள் கட்சி,
22. பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி,
23. போர்த்துக்கீஸ் கம்யூனிஸ்ட் கட்சி
24. ரொமோனியன் சோசலிஸ்ட் கட்சி,
25. செர்பியா கம்யூனிஸ்ட் கட்சி,
26. ஸ்பெயின் மக்கள் கம்யூனிஸ்ட் கட்சி,
27. ஸ்பெயின் தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சி,
28. கடலோனியா கம்யூனிஸ்ட் கட்சி,
29. சூடானிய கம்யூனிஸ்ட் கட்சி,
30. ஸ்வாஜிலாந்த் கம்யூனிஸ்ட் கட்சி,
31. துருக்கி கம்யூனிஸ்ட் கட்சி,
32. உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி,
33. வெனிசுலா கம்யூனிஸ்ட் கட்சி,
34. கலிசான் மக்கள் யூனியன்.

■

## மே தின கொடியேற்ற நிகழ்ச்சி



நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் மே தின கொடியேற்ற நிகழ்ச்சி 01.05.2021 அன்று காலை நாகப்பட்டினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டிடம் முன்பு சமூக இடைவெளியுடன் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கொடியை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட துணைத் தலைவர் மா.ராணி அவர்களும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியை முன்னாள் தேசிய செயற்குழு உறுப்பினரும் நாகை தொழிற் சங்க கூட்டமைப்பு தலைவருமான சு.சிவகுமார் அவர்களும் ஏற்றிவைத்து உரையாற்றினர். தொழிற்சங்க கூட்டமைப்பு பொருளாளர் வி.பாலசுப்பிரமணியன், அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அரசு ஊழியர் சங்க நாகை வட்டத் தலைவர் எம்.மேகநாதன் நன்றியுரையாற்றினார்.

## அஞ்சலி

FTU சர்வதேச தொழிற்சங்கத்தின் நீண்டகால உறுப்பினர் தோழர்கில்டா சாக்கோன் பிராவோ

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அகில இந்தியபொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரியின் மகன் ஆஷிஸ் யெச்சூரி (கோவிட் தொற் சிகிச்சை பலனின்றி)

சின்னக் கலைவாணர் விவேக் (தடுப்பூசி விழிப்புணர்வுக்காக)

மக்கள் பாடகர் தோழர் திருவுடையான் மகள் அன்பரசி (சாலை விபத்தில் மரணம்)

தோழர் யு.சண்முகம் அவர்களின் தாயார் திருமதி யு.பி.இராணி

முன்னாள் தேனி மாவட்ட துணைத் தலைவர் திரு.இரா.ரெங்கராஜன்

ஆகியோரின் மறைவுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

**இரத்த தானம் செய்வோம்! உயிர்களைக் காப்போம்!**

**கோவிட்-19 நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க முகக்கவசம் அணிவோம்!**

## வருந்துகிறோம்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவரும், ஜாக்டோ-ஜியோ பேரமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரும், தமிழ்நாடு சமூக நலத்துறை பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவருமாகிய தோழர் மு.அன்பரசு அவர்களின் மனைவி திருமதி ராஜேஸ்வரி (வயது 48) அவர்கள் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கொரோனா தொற்று நீங்கிவிட்ட நிலையிலும் ஒரு வாரத்திற்கு மேல் ஆக்ஸிஜன் அளவு உயராத காரணத்தினால் 05.05.2021 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மாநில மையம்**
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

# 38வது அமைப்பு தின கொடியேற்ற நிகழ்வு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 38ஆவது அமைப்பு தினம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டக் கிளைகளிலும் கொடியேற்றி சிறப்பாக கொண்டாப்பட்டது. திருச்சி -2 வட்டக்கிளை காஜாமலை பல்துறை வளாகத்தில் மாவட்டச் செயலாளர் பி.பழனிச்சாமி, நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் மாவட்ட துணைத் தலைவர் ஜீவானந்தம் கொடியேற்றினார்கள். திருச்சி -1 வட்டக்கிளை உட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கொடியினை மாவட்ட இணைச் செயலாளர் கேஎம்.இராஜேந்திரன், நீதிமன்ற வளாகத்தில் உள்ள வணிக வரி அலுவலகத்தில் முனைவர் கா.பால்பாண்டி, மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள பட்டு வளர்ச்சித் துறை அலுவலகத்தில் மாநில துணைத் தலைவர் எ.பெரியசாமி கொடியேற்றி சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் தோழர் பழனிச்சாமி, வட்டக்கிளை துணைத் தலைவர் பெருமாள்ராஜ் வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியாக தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கத்தின் மாநில பிரச்சாரச் செயலாளர் முனைவர் கா.பால்பாண்டி நன்றி கூறினார். அமைப்பு தின நிகழ்வில் மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் சக்திவேல், சிவசங்கரன், மலர்மன்னன், சூடுராஜேந்திரன் மற்றும் அனைத்து துறை ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். மேலும் திருச்சி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூர் அரசு ஐடிஐ, விமான நிலைய அருகில், மணப்பாறை, தொட்டியம், துறையூர், மண்ணச்சநல்லூர் மற்றும் இலால்குடி வட்டக்கிளைகளிலும் வட்டக்கிளை நிர்வாகிகள் கொடியேற்றி அமைப்பு தின விழா நடைபெற்றது.

★★★★

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 38ஆம் ஆண்டு அமைப்பு தினம் நல்லம்பள்ளி வட்டக்கிளை சார்பில் வட்டத்தலைவர் சந்திரன் அரசு ஊழியர் சங்க கொடியையும் மற்றும் அகில இந்திய கொடியை மாவட்ட இணைச் செயலாளர் சி.காவேரி அவர்களும் ஏற்றி வைத்தார்கள். இதில் வட்டச்செயலாளர் பிராபாகரன் மகேஸ்வரி, மதலைமுத்து மற்றும் ஊரக வளர்ச்சி துறை ஊழியர்கள் கலந்துகொண்டனர்.



# PASSஆனால் போதுமா? BOSSஆக வேண்டாமா?

மை டியர் காம்ரேட்ஸ்,

இந்த லாக்டவுன் காலத்தில் பெற்றோர்களுக்கு இருக்கக்கூடிய பெரும்பிரச்சனை என்ன தெரியுமா? கொரோனா எப்போ முடிஞ்சு பள்ளிகள் எல்லாம் எப்போ திறக்கப் போறாங்க என்பதுதான். பல பெற்றோர்களுடைய எண்ணம் ஆண்டு பள்ளிக் கட்டணம் அதிகமாக வாங்கிக்கிட்டாகூட பரவாயில்லை காலையில பள்ளிக்கு போயிட்டா வீட்டுல கொஞ்சம் நிம்மதியா மத்த வேலைகளை கவனிக்கலாம் என்றுதான் இருக்கிறது. கணவன் மனைவி இருவரும் வேலைக்கு போகிற வீடுகளில் இன்னும் திண்டாட்டம். ஆன் லைன் கிளாஸை பையனோ பெண்ணோ ஒழுங்ககாக கவனிக்கிறார்களா என்று ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை அலுவலகத்திலிருந்து போன்போட்டு கவனித்துக் கொண்டே இருப்பார்கள். அப்பாவுக்கு, அம்மாவுக்கு மட்டுமல்ல ஆன் லைன் கிளாஸுக்கும் டிமிக்கி கொடுத்து விட்டு பல பிள்ளைகள் கேம்ஸ், வீடியோக்கள் என்று இறங்கிவிடுகிறார்கள்.

ஏதோ ஒரு அவசரத்திற்கு மூன்று மாதங்கள் ஆன்லைன் வகுப்பு என்றால் பரவாயில்லை. இது என்ன இப்படி நீண்டுகொண்டே போய்கிட்டே இருக்கே என்று பிள்ளைகள் ஆன்லைனில் பாடம்படிப்பதைப் பார்த்து ஒவ்வொரு பெற்றோரும் அதிர்ந்து போயிருக்கிறோம். உண்மையில் இந்த ஆன்லைன் வகுப்புகளில் பிள்ளைகளால் ஒழுங்காக பாடத்தை கவனிக்க முடிகிறதா முடியுமா என்ற கேள்விகள் கூட பெற்றோர்களிடம் உள்ளது. பள்ளிக்கூடத்தில் போய் படிப்பது என்பது பாடங்களை படிப்பது மட்டுமல்ல சமுதாயத்தை படிப்பதாகும். பலதரப்பட்ட பிள்ளைகளின் குணாம்சங்கள், ஆசிரியர்களின் அணுகுமுறைகள், ஒவ்வொரு மாணவரிடமும் ஆசிரியர்கள் செலுத்தும் அக்கறை போன்றவை ஒவ்வொரு மாணவரையும் செதுக்கும் உளிகளாகும். விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகள் சுற்றுலாப் பயணங்கள் போன்றவை மாணவர்களிடம் புதைந்திருக்கும் திறமைகளையும், ஒழுக்கத்தையும், சமுதாயத்தை தம் குடும்பமாக பாவிக்கும் எண்ணத்தையும் வளர்க்கும். தேர்வுகள் இன்றி வெற்றி பெற்றிருக்கும் இந்த இரண்டு வருடங்கள் உண்மையில் தங்கள் பிள்ளைகளின் தரத்தை தகுதியை திறமையை மேம்படுத்தியிருக்கிறதா என்ற சந்தேகம் பல பெற்றோர்களுக்கு இருக்கிறது. இந்த இரண்டு வருட கொரோனா ஆல்பாஸ் விவகாரம் மாணவர்களின் எதிர்காலத்தில் என்னவாக பிரதிபலிக்கும் என்ற கவலை பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் எழுந்துள்ளது.

இந்த கொரோனா ஆல்பாஸ் என்கிற விஷயம் மாணவர்களின் வேலைவாய்ப்பில், திறமைகளை மதிப்பீடு செய்வதில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று கூட ஒரு கருத்து நிலவுகிறது. ஆக எவ்வகையில் பார்த்தாலும் பள்ளிக்கூடம் சென்று பயிலும் கல்வியைப் போல் ஆன்லைன் வகுப்புகள் மூலம் பெறப்படும் கல்வி, மாணவ மாணவியரை PASS ஆக்கும் BOSS ஆக்குமா என்பது விவாதத்திற்குரிய கேள்வி.

இப்போதெல்லாம் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்க சிபாரிசு தேவைப்படுகிறது, அல்லது நகரத்தில் பெரிய செல்வந்தராகவோ, கம்பெனி உரிமையாளராகவோ, அரசாங்கத்தில் உயர்பொறுப்பில் உள்ளவராகவோ அல்லது பிரபல சினிமா, சின்னத்திரை நடிகர், தயாரிப்பாளர், இயக்குர்களாவோ இருந்தால்தான் இடம் கிடைக்கிறது. நடுத்தர வர்க்கத்தினர் தங்கள் குழந்தைகளை பள்ளியில் சேர்க்க எம்.எல்.ஏ., எம்.பி., அமைச்சர் போன்றவர்களிடம் சிபாரிசு பெற்று வர வேண்டியுள்ளது.

சில குறிப்பிட்ட பள்ளிகளில் இடம் வாங்குவது என்பது பல பெற்றோர்களுக்கு இமாலய சாதனை. பள்ளியில் இடம் வாங்கிவிட்டால் அது அவர்களுடைய வாழ்நாள் சாதனையாகிவிடுகிறது. பிள்ளைகள் பள்ளியில் எப்படி கற்பிக்கப்பட வேண்டும் அங்கே என்ன கற்றுக் கொடுக்கிறார்கள் என்பது பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படுவதில்லை. இடம் பெற்றுவிட்டாகிவிட்டது, பணம் கட்டியாகிவிட்டது. இனிமேல் பள்ளி பார்த்துக் கொள்ளும். பையன் பள்ளியை விட்டு வெளியே வரும் போது நல்ல அறிவாளியாக வருவான் என்ற மிதப்பிலேயே இருப்பார்கள் இத்தகையோர்.

சென்னையில் உள்ள ஒரு செல்வந்தர் அவர் அரசியல்கட்சி பிரமுகரும் கூட. எல்லோருக்கும் தெரிந்த நபர் அவர். அவருடைய மகன் ஒருநாள் பள்ளிக்குப் போகாமல் அடம் பிடிக்கிறான். செல்வந்தர் என்ன ஆயிற்று என்று பையனிடம் விசாரிக்கிறார். ''அந்த வாத்தியாரு கிளாஸ்ல இருக்கற மத்தவங்களை

விட்டுட்டு வேணுமின்னே என்கிட்டேயே எல்லாக் கேள்வியும் கேட்கிறாருப்பா? எனக்கு அவமானமா இருக்கு நான் ஸ்கூல் போக மாட்டேன்.'' என்று அடம்பிடிக்கிறான். அதற்கு அவனுடைய தந்தை சிரித்துக்கொண்டே, ''உன்கிட்டே நிறைய கேள்வி கேட்கிறாருன்னா உனக்குதான் அதுக்கெல்லாம் பதில் தெரியும்னு நெனச்சிருப்பாரு.'' ''அதெல்லாம் இல்லப்பா. நான் அவர் அட்டன்டன்ஸ் எடுக்கும்போது எழுந்து நின்னு 'உள்ளேன் ஐயா'ன்னு சொல்லலையாம். அதை அவரு அவமானக் குறைச்சலா எடுத்துக்கிட்டு என்னை பழிவாங்கறாரு.'' ''ப்பூ இவ்வளவுதானா. கவலையை விடு. இனிமே அவரு உன்னை கேள்வி கேட்க மாட்டாரு. நான் ஒரு லெட்டர் எழுதித் தர்றேன் அதை அவருகிட்டே கொண்டுபோய் கொடு.'' என்கிறார்.

''அன்புள்ள வகுப்பாசிரியருக்கு. நீங்கள் என் பையனிடம் பழிவாங்கும் நோக்குடன் நடந்து கொள்வதாக தெரிய வருகிறது. இனிமேல் அவனிடம் வகுப்பறையில் எந்தக் கேள்வியும் கேட்கக்கூடாது. இன்னொரு விஷயம் நீங்கள் அட்டென்டென்ஸ் எடுக்கும்போது அவன் எழுந்து நின்று பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். மரியாதை என்பது அவனாக கொடுப்பது. பையன் உங்களை மரியாதை கொடுக்கும் விதத்தில் நீங்கள் நடந்து கொள்ளுங்கள். என்னைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இனிமேல் இதுபோன்ற செய்திகள் என் காதுக்கு வந்தால் நீங்கள் அந்த பள்ளியில் இருக்க மாட்டீர்கள் என்பதை உணரவும்.''

இதுதான் அந்தக் கடிதம். இந்தப் பையன் பிற்காலத்தில் எந்த வடிவமைப்பில் பள்ளியிலிருந்து வெளிவருவான் என்பதை உங்களின் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன். இன்னொரு முக்கியப் பிரமுகர் நாட்டு மக்களுக்கெல்லாம் தெரிந்தவர். அவர் தன் மகனை பள்ளியில் சேர்க்கும்போது வகுப்பாசிரியருக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்புகிறார். அந்தக் கடிதத்தை வகுப்பாசிரியர் கொஞ்சம் அச்சத்துடனேயே பிரிக்கிறார். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை நாமும் சேர்ந்து படிப்போம்.

''அன்புள்ள பள்ளி ஆசிரியருக்கு,

என் மகனின் கல்வி இன்று தொடங்குகிறது. அவனை உங்கள் கரங்களில் ஒப்படைக்கிறேன். பள்ளிக்கூடம் நிச்சயம் அவனுக்கு ஒரு பெரும் புதிராக இருக்கப் போகிறது. விழித்திருக்கும் நேரமெல்லாம் விட்டிற்குள் அங்குமிங்கும் சுற்றித்திரிந்தவன் இனிமேல் ஓரிடத்தில் சிலமணி நேரம் அமர்ந்து பாடம் படிக்க வேண்டும் என்னும் ஒழுங்குமுறையால் அச்சமடைவான். அவன் நிச்சயம் அழுவான். உங்களையும், உங்கள் வகுப்பறையையும், பள்ளியையும் வெறுப்பான். அவனை அழைத்து அவன் தோள்மீது கைபோட்டு சில வார்த்தைகள் எனக்காக அவனிடம் நீங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். சில அடிப்படைகளை நீங்கள் அவனுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

உன் தந்தை யார் என்பதோ அவர் எவ்வளவு படித்தவர் என்பதோ எந்தப் பதவியில் இருக்கிறார் என்பதோ உன்னை எந்தவகையிலும் உயர்த்தவோ தாழ்த்தவோ போவதில்லை என்பதை தொடக்கத்திலேயே அவனுக்கு தெளிவுபடுத்தி விடுங்கள். உன் தந்தையிடம் எவ்வளவு செல்வம் இருக்கிறது என்பதைப் பொறுத்து நீ மதிப்பிடப்படமாட்டாய் என்பதையும் கையோடு சொல்லிவிடுங்கள். சுதந்திரத்தின் மற்றொரு பெயர்தான் கட்டுப்பாடு, வாசிப்பின் மற்றொரு பெயர் விளையாட்டு, கற்றுக்கொடுப்பதின் மற்றொரு பெயர்தான் கற்றுக்கொள்ளுதல் என்பதை அவனுக்கு உணர்த்துங்கள்.

நீ ஒரு பூந்தோட்டத்தில் உள்ள தனித்துவமிக்க மலர். அதேநேரம் பூந்தோட்டத்தின் ஒரே பகுதி தான் நீ என்று அவனிடம் சொல்விடுங்கள். பூந்தோட்டத்தில் மலர்களோடு முள்ளும் இருப்பது போல வகுப்பறையில் ஏற்பும் நிராகரிப்பும் கலந்தே இருக்கும். உன்னோடு உடன்படுவர்களை மட்டுமல்ல உன்னோடு முரண்படுபவர்களையும் நீ இங்கே சந்திப்பாய் என்று அவனிடம் நீங்கள் சொல்லுங்கள். உன்னை ஏற்பவர்கள் எல்லாம் நண்பர்களும் அல்லர். எதிர்ப்பவர்கள் எல்லாம் எதிரிகளும் அல்லர் என்பதையும் தெளிவுபடுத்திவிடுங்கள்.

ஒருநாள் பள்ளியே உன் உலகமாக மாறிப்போகும். ஆனால் நிஜ உலகம் வகுப்பறைக்கு வெளியே நீண்டுகிடக்கிறது என்பதை அவனுக்கு நினைவுபடுத்துங்கள். பள்ளி என்பது படிக்கும்இடம். உலகம் என்பது வாழும்இடம் என்று அவன் நினைத்துவிடக்கூடாது. கற்பதும், வாழ்வதும் வெவ்வேறானவை அல்ல என்பதை அவனுக்குச் சொல்லுங்கள். உனக்கு வீடொன்று இருப்பதும் நேரம் தவறாமல் உன் மேசைக்கு உணவு வந்து சேர்வதும் உடுத்திக்கொள்ள நல்ல ஆடை இருப்பதும், படிக்கப் புத்தகங்கள் இருப்பதால் பேனாவும் பென்சிலும் இன்னபிறவும் கேட்பதற்கு முன்பே கையில் கிடைப்பதும் இயல்பானவை என்று தவறாக நினைத்துவிடப்போகிறான்.

வீடின்றி, ஆடையின்றி, உணவின்றி, படிக்க வசதியின்றி, பேனா பென்சில் இன்றி உலகம் முழுக்க எத்தனை லட்சம் குழந்தைகள் இருளிலும், பசியிலும், அறியாமையிலும் துவண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை தயவு செயது அவனுக்கு உணர்த்துங்கள்.

அவர்கள் குடும்பமும் உன் குடும்பமும் ஒரே உலகில்தான் அருகருகில் வசிக்கின்றன என்பதை அவனுக்கு புரிய வையுங்கள். உன் வயதுக் குழந்தைகள் ஒரு துண்டு ரொட்டிக்காக முதுகு வளைக்கிறார்கள். அவர்கள் உனக்காகவும் சேர்த்தே உழைக்கிறார்கள் என்று அவனிடம் சொல்லுங்கள். அதைக்கேட்டு அவன் குற்றஉணர்வு கொள்ள நேரிடும். பரவாயில்லை. அந்த உணர்வு காலம் முழுவதும் அவனை விட்டு நீங்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். அழுக்கைக் கண்டு, அறியாமையைக் கண்டு, கிழிந்து தொங்கும் ஆடையைக் கண்டு, தகரக் கூரைகளைக்கொண்ட குடியிருப்பைக் கண்டு, சாக்கடையைக் கண்டு அவன் முகம் சுளிக்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

என் வீடு, என் நாடு, என் மொழி, என் மதம் என்று அவன் அவன் சுருங்கிப் போய்விடக்கூடாது. மற்றவர்களின் உணவு வழக்கத்தை, மற்றவர்களின் கடவுளை, மற்றவர்களின் வாழ்க்கை முறையை, மற்றவர்களின் நம்பிக்கையை மதித்து நடந்தால்தான் உன் கல்வி முழுமையடையும் என்று அவனிடம் சொல்லுங்கள். அவன் தன் நண்பர்களைத் தேர்வு செய்யும் போது தயவு செய்து உடனிருங்கள். ஏன் வெள்ளைக் கரங்களை மட்டுமே பற்றிக்கொள்கிறாய்? உன்னைப் போல் சிந்திப்பவர்களோடு மட்டுமே ஏன் இணைந்திருக்கிறாய்? பெண்களோடு ஏன் பழகத் தயங்குகிறாய் என்று அவனுடைய போதாமைகளை சுட்டிக்காட்டுங்கள். அவன் நிச்சயம் தடுமாறுவான். நிச்சயம் கீழே விழுவான். தடுக்காதீர்கள். அவனாகவே எழுந்திருக்கட்டும். அவனுக்கான பாடங்களை அவனே கற்றுக் கொள்ளட்டும். அன்பால் அவனை நிரப்புங்கள். அவன் புலன்களைக் கூர்மைப் படுத்துங்கள். அவனை அகலப்படுத்துங்கள். அவன் இதயத்துக்குள் ஒளியைப் பாய்ச்சுங்கள். ஒரு மனிதனாக அவனை என்னிடமும் இந்த உலகிடமும் திருப்பித் தாருங்கள்.

இப்படிக்கு

ஆபிரகாம் லிங்கன்''

அமெக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் தன் மகனின் கல்விக்காக அடிப்படை விஷயங்களுக்காக பள்ளி ஆசிரியருக்கு எழுதிய கடிதம் இது. இந்தக் கடிதம் போல் நம்மில் எத்தனை பேர் எழுதியிருக்கிறோம்? வகுப்பறையில் குழந்தைகள் வளர வேண்டியது சொகுசாகவா? சுயகட்டுப்பாட்டுடன் கூடிய ஒழுக்கத்துடனா? நம்முடைய குழந்தைகள் ஆக வேண்டியது PASSஆ? BOSSஆ? நாம் எதிர்பார்க்கும் சமுதாய மாற்றமும், வளர்ச்சியும் வகுப்பறையாலும் வாத்தியாராலும் மட்டும் கிடைத்து விடுமா? ஒவ்வொரு பெற்றோருடைய பங்கும் குழந்தைகளை தலைசிறந்த மனிதர்களாக ஆக்குவதில் உள்ளது என்பதை உணர்ந்து செயல்படுவோமா?

**- ஜிஜி**



*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை நீலகிரி மாவட்ட தலைவர் முத்துகுமார், தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் TAMSA கொடியினை பிபின் போஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.*



திண்டுக்கல்
கொடியேற்று விழா

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com